செந்தமிழ்

தொகுதி-90 ஆகஸ்ட்-96 பகுதி-8

திங்கள் இதழ்

ஆசிரியர் மா. தனுக்கோடிபாண்டியன் பி.ஏ., பி.எல்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர்: பேரறிஞர் நா.பாலுசாமி
எம்.ஏ., பி.எல்., எம்.லிட்., பி.எச்டி., எம்.எட்.,

செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர் தமிழண்ணல்

முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் செ.கந்தசாமி

முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் அ.தட்சிணாமூர்த்தி

முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் பழநி. அரங்கசாமி

தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்

பேறிஞர் ம.ரா.போ.குருசாமி

செந்தில், தாமு நகர், கோயம்புத்தூர்

பேரறிஞர் ச.மெய்யப்பன்

முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

பேரறிஞர் சி.கதிர் மகாதேவன்

மதுரை காமராசர் பல்கலைக் கழகம்

பேரறிஞர் கு.துரைராசு

முன்னாள் முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் அ.அ.மணவாளன்

தமிழ்த்துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக் கழகம்.

பேரறிஞர் க.ப.அறவாணன்

மத்திய பல்கலைக் கழகம், புதுவை.

பேரறிஞர் சூ.இன்னாசி

கிறித்துவத் தமிழ்த்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

பெரும்புலவர் இரா.இளங்குமரன்

திருவள்ளுவர் தவச்சாலை, அல்லூர், திருச்சி.

பேரறிஞர் சி.மொ.இராசேந்திரன்

செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் நா.பொன்னப்பன்

மதுரைக் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் திருமதி பத்மா சீனிவாசன்

ஆங்கிலப் பேராசிரியர், மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.

பேரறிஞர் நா.ந.மாணிக்கம்

தமிழ்த்துறைத் தலைவர், தியாகராசர் கல்லூரி, மதுரை.

பேரறிஞர் திருமதி சரசுவதி விசய வேணுகோபால்

மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.

பேரறிஞர் எஸ்.எம்.கமால்,

21, ஈசா பள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம்.

பேரறிஞர் ஈ.கே.இராமசாமி,

தமிழ்ப் பேராசிரியர், யாதவர் கல்லூரி, மதுரை.

பொருளடக்கம்

1. சேதுநாடுந் தமிழும்

மகாவித்வான் ரா.ராகவய்யங்கார் 296

2. எல்லோர்க்கும் தொல்காப்பியம்

பேரறிஞர் நா.பாலுசாமி 307

3. அபிராமி அந்தாதி 317

பேரறிஞர் அ.தட்சிணாமூர்த்தி

4. திருமூலர் நெறி

பேரறிஞர் சு.ப.அண்ணாமலை 323

5. விட்டிசையும் யாப்பும்

பேரறிஞர் செ.வை.சண்முகம் 330

சேதுநாடும் தமிழும்

மகாவித்வான் ரா.ராகவய்யங்கார்.

(முன் இதழ்த்தொடர்ச்சி...)

'நட்டூரிற்சோமேசர்கோவிறலமானதனைநகத்தாற்செய்து
மட்டூருங்குழலுமையாளுலகுடையநாயகியைவகுத்தங்கேற்றிக்
கட்டூரன்கிளைவாழச்சேதுபதிரகுநாதன்கருணைவாழ
நெட்டூருங்காணியுங்கொண்டாண்டுகொண்டானிறைஞானச்சேதிராயன்''

இப்பாட்டாற் சேதுபதிமந்திரி சேதிராயனாதல் தெரிக.
பாண்டியன் தென்கொடுமூர்வேணாடனைப்பாடியது:-

''சென்றுமகாமேருவின்மேற்சேலேற்றியேபுடைத்தே
யன்றிருந்தேஞ்சங்கத்தவரோடு - நன்று
விருந்தோம்புந்தென்கொடுமூர்வேணாடன்கூட
விருந்தோம்படிவேண்டியின்று''

இதன்கட் கூறப்பட்ட வேணாடன் கூத்தரால் விக்கிரமசோழனுலாவில், ''வெம்பிக், கலக்கியவஞ்சக்கலியதனைப்பாரில், விலக்கியவேணாடர் வேந்தும்'' என்று புகழப்பட்டவனாவன். இச்சேதுநாட்டு இவனைச் சிறப் பித்துரைக்குங்கதைகள் பல வழங்குகின்றன. இவன் வரையாது சோறிட்டுப் புகழ்பெற்றவன். ''நன்றுவிருந்தோம்பும்'' என்னும் விசேடத்தானும், ''கலி யதனைப்பாரில்விலக்கிய'' என்னும் விசேடத்தானும் உணரலாம். இவனே இந்நாட்டுச்சாளைக்கிராமங்கண்டவனென்பது,

''மாறுகொண்டமன்னவரைவடவரையிலேற்றிவல்லாரைத்திறைகொணர்ந்தவரகு
ணவீச்சுரனுக்

காறிரண்டுபன்னிரண்டினடியளந்தகோலாலகமகிழ்ந்தேதென்னான்குகிழமே
லெட்டுக்

கூறுகொண்டமடைகுழிமுப்பத்திரண்டுகுறுந்தெருவும்பெருந்தெருவுங்குறித்து
நாட்டிச்

சேறுகொண்டவயற்சாளைக்கிராமங்கண்டான்றென்கொடுமூர்வேணாடச்செல்
வன்றானே''

என்பதனாலறிக

வெண்பாப்புலிக்கவிராயர்:- இவர் சேதுநாட்டுச்செவ்வூரினர். இவர் வசைபாடுதலில்வல்லவரென்பது,

''கந்தனேநீயானாற்கற்றவனேநானானா
லிந்தவருடம்போயெதிராண்டில்-வந்தவினை
தீராவினையாய்த்திரும்பாவியாதியாய்
வீராசாமிக்கேவிதி''

என்னும் வெண்பாவா லறியப்படுவது. இவர் நண்டுக்கறிவேட்கைமிக்க கருத்தான் என்பான் புலாலுண்டலையொழித்ததாகக்கூறியதுகேட்டுப் பாடியது,

''வண்டுவந்தாற்றெரியும்மலர்வாசம்வழிநடத்திக்
கொண்டுவந்தாற்றெரியும்பரிவேகங்குணத்துடனே
கண்டுவந்தாற்றெரியும்பிறர்வாஞ்சைகறிக்குதவு
நண்டுவந்தாற்றெரியுங்கருத்தானுடைநாநயமே'' என்பது.

மதுரகவி:- இவர் இசைப்பதங்கள்பாடுதலில் அதிகம்வல்லவர். இவர் இச்சேதுநாட்டு மதிமந்திரி முத்திருளப்பபிள்ளையவர்களையும், சிவ கங்கை யாண்ட மருதுபாண்டியனையும் மிகவும் அரியபெரிய இசைப்பதங்களாற்

புகழ்ந்துளர். இவர் இச்சேதுநாடாண்ட மங்களேச்வரிராணி யாரைப்பாடிக் காக்கைகுளம் என்ற விளைபுலவூரைப் பரிசிலாகப்பெற்றவர். ''அன்னைமங் களேச்வரியென்னைக்கடைக்கண்ணாலேபார்த்தாள் காக்கைகுளமறுபத்து நாற்கலமுநிருபத்துடனேதாரைவார்த்தாள்'' என்றிசைப்பதத்துவருதலானிது ணரலாம். இக்காக்கைகுளம் இவர்க்குக் கிடைத்தகாலையி லிவர்க் கிடர்ப லவியற்றியவன் அக்காக்கைகுளத்து உடையான் என்பான். அவ்வுடையா னைத்தொலைத்து மதுரகவியைக் காத்தவன் வீரசோழனிலிருந்த ஆறாயிரம் என்பான். இவ்வாறாயிரத்தின் நன்றிபாராட்டி இம்மதுரகவிபாடியவெண்பா,

''காக்கைகுளமாங்கடிமலர்ப்பூம் பொய்கையந்த

ஊர்க்குட்கராவாமுடையானே - நீர்க்குவந்த

வாரணமேநல்லமதுரகவிநேமிதொட்ட

ஆரணனேஆறாயிரம்''

என்பது. இவர் மதுரைமீனாக்ஷியைப்பாடிய ''எப்படியாட்கொள்வாயே'' என்னும் முதலையுடையபாட்டு எவருள்ளத்தையும் உருக்கும். இச்சேது நாட்டுப் பெருங்கரையில் இசைப்பதம்பாடுதலிற்சிறந்தவராயிருந்த கவிகுஞ் சரமையரும் இவர்பாற்பயின்றவராவர். இவர் அழகர்குறவஞ்சி பாடிச் சிவகங்கையரசர்பால் அரங்கேற்றிக் கொட்டங்காய்ச்சியேந்தல் என்னும் ஊரைப் பரிசிலாகப்பெற்றார். இவர்பாடியது கந்தபுராணக்கீர்த்தனை.

தலைமலைகண்டதேவர்:- இவரூர் காடடர்ந்தகுடியென்பது; சேது நாட்டு நயினார்கோவிலெனப்பெயரிய மருதூரையடுத்துள்ளது. இவர் பாடிய மருதூரந்தாதி கற்றார்பலருமறிந்ததே. இவர்சேதுவேந்தர்குலத்தவர்.

சிற்றம்பலதேசிகர்:- இவரூர் திருமறைக்காடாயினும் இச்சேது நாட்டுச் சிவஸ்தலமாகிய திருவாடானையென்னுந்திருப்பதிமான்மியந் தமிழாற் பாடிப் பலவரிசைகளும் வருஷாசனமும் சேதுவேந்தரால் அளிக்கப்பெற்றா ராவர்.

பெருங்கருணைமுத்தழகர்:- இவர் பெரிய அவதானி. அக்ஷராவதானம் ஆயிரம் அக்ஷரத்தை எங்ஙனமாற்றினும் முறைபெய்துரைக்க வல்லவர். அன்னியபாஷைகளையுங்கேட்டவண்ணமே திரும்பச்சொல்லும்ஞாபக சக்தி வாய்ந்தவர். இவர்பாடியது திருக்கோட்டியூர்க்கலம்பகம்.

மாம்பழக்கவிராயர்:- இவர் கவிச்சிங்கநாவலர் என்று பட்டம் பெற்றது சேதுபதிவேந்தர்பாலே. இவர் சேதுபதிவண்ணமென்றொன்று பாடினர். பிறரா லாச்சரியப்படத்தக்க ஞாபகசக்திவாய்ந்தவர். இவர் ஒரு புலவன்

பாடிய நூறுபாட்டையும் தாம் பாடியபழம்பாட்டென்று தாம் ஒருதரங்கேட்டது கொண்டேசொல்லிக்காட்டியது இந்நாடறிந்தது. இவர்காலத்தே கல்போதுப் பிச்சுவையர் என்னும் வித்துவான் எளிதிற்பொருளறியலாகாத படியாத்த திருவாடானையந்தாதி என்ற நூலைக்கொண்டு சேதுபதிபாலெய்த அதனைக்கேட்டு,

''உச்சிதமாமுன்னோருரைத்ததமிழையெல்லா
மச்சரங்களச்சரங்களாகவே - நிச்சயமாப்
பிச்சுவைப்பதாலேநின்பேர்பிச்சுவையனென
வைச்சனன்கல்போதுமன்''

என்று பாடினராம். கல்போதுப் பிச்சுவையர்பாடிய திருவாடானையந்தாதியில் ஒருபாட்டு:-

''முன்னவனைப்பாம்பிரவிகொடுநரகிற்புகுவனெனமொழியும்வேதம்
அன்னவனைச்சிறுகாலோதிமம்பழனம்பவன்கயிலையடைவானென்றும்
கன்னனெடுங்கமுகினஞ்சூழ்பொழில்பெருகுமாடானைக்கருத்தன்பேரை
யிந்நிலத்திற்கீர்த்திநெல்லிதரித்திடுமோவென்றுமடியேற்குத்தானே''

பாம்பிரவி-பணியாதவன். சிறுகாலோதிமம்பழனம்பவன் - வந்தனஞ்செய்பவன். கீர்த்திநெல்லிதரித்திடுமோ - புகழாமலகந்தரித்திடுமோ (எ-று) இந்நூலரங்கேறியது சேதுவேந்தரவைக்களத்தேதான்.

சோமசுந்தரகுரு:- இவர் இவ்விராமநாதபுரத்து நெல்லையப்பரென் பவர் புத்திரர். இவருடன்பிறந்தார் வேதாந்தசூடாமணியுரைக்குப் பாயிரஞ்செய்த சாமிநாதன் என்பார். இதனை ''வடிதமிழ்க்கும்பன் சுவாமிநாதன்றுணைவன் வளர்நெல்லையப்பன்மைந்தன், வளர்பெருங் குணஞான சோமசுந்தர குருபதாம்புயம்பரவுதாசன்'' எனச்சரவணப் பெருமாட்கவிராயர்பாடுதலா னறிக. ஆதியில் இச்சேதுவேந்தராற் பலஊர்களை அளிக்கப்பெற்றகாரணத்தாலந்நன்றிபாராட்டிச் சேதுபதியன்னமும், காவிரிநீரும் ஆவுடையப்பநீழலும் யாமென்று முடையோம் என்று ஆதீனகர்த்தர்கள் நாளும்புகழுஞ் சிறப்புடையதும், செந்தமிழ்ப்பயிரைச் சீர்பெறவளர்த்ததும், சைவ சித்தாந்த சாஸ்த்திரங்கட்கெல்லாம் விளைநிலமாயதும் இன்றைக்கும் என்றைக்கும் புலவர்க்கெல்லாந் தாயகம்போன்றது மான திருவாவடுதுறையாதீனத்து வடகலைத் தென்கலைக்கடனிலைகண்ட ஆசிரியர் சிவஞானமுனிவர்பாற் கல்விகற்ற பெருஞ்சிறப்புடையராவர். இச்சோமசுந்தரகுருமாணாக்கர் **அட்டாவதானிபெரியசரவணக்கவிராயர்.** இராமநாதபுரம் இயற்றமிழாசிரியர் என்று பெயர்சிறந்து நன்னூற்குக் காண்டிகையுரையும், ஆத்தி சூடியுரையும், கொன்றைவேந்தனுரையும் இயற்றியவரும், தமிழ்க்கல்வியானிரம்பிய சரவணப்பெருமாளையர் விசாகப்பெருமாளையரிவர்கட்குத் தமிழாசிரி

யருமான இராமாநுஜகவிராயர் இவர் மாணாக்கராவர். இவர் சேதுபதியா லன்புபாராட்டப்பட்டவ ரென்பதுமுதலியவற்றை, ''துங்கமிகுசேதுபதிமகி ழுநேசன்சோமசுந்தரச்சுவாமிதாசன், சோட சவதானச்சரவணப்பெருமாட்சு யம்ப்ரகாசன்கையோலை'' எனச் சரவணக்கவிராயரோலைத்துாக்கின்வருத லானறிக. நன்னூல் இராமாநுஜ காண்டிகைக்கண், ''தவக்கொழுந்தென்ன மாதவத்தினர்துதித்துறுஉ சிவஞானதேசிகன்சேவடிக்கன்புபூண், டவனூாலு ணர்த்திய வைந்திய லோர்ந்தனன், சோமசுந்தரனெனுந்தொன்னூற்குரவன்'' எனவும், ''தகைகெழுசோமசுந்தரகுருவருளுக், கென்னாலெனுமகத்தினைப் பலியீந்து'' எனவும் வருதலானும் இவை யுணரப்படும். இச்சோமசுந்தர குரு இயற்றியது திருக்கழுக்குன்றக்கோவை.

இராமநுஜ கவிராயர்: இவ்விராமநாதபுரத்தரென்பது அஷ்டாவதானம் வீராசாமிக்கவிராயர் ''முகவைவருசெல்வனெங்கோன் முறைத் தமிழாசிரிய னிராமாநுசன்னா முன்னுகவிராயன்'' எனப்பாடுதலானறியலாம். இவரே அக்காலத்து முற்படத் தமிழ்நூல்களை அச்சிடத் தொடங்கியவர். தமிழிற் சிறந்த திருவள்ளுவர் திருக்குறளைப் பரிமேழகருரையுடனும் அதற்குத் தெளிபொருள் விளக்கத்துடனும் அச்சிடத்தொடங்கினா ரிவரே. இவரே டுரு, தாம்ஸன்கிளார்க்கு, ரானஸ், போப், வின்ஸிலோ முதலிய பெரிய ஆங்கிலேயர்கட்குத் தமிழறிவை ஊட்டியவர். வின்ஸிலோ அகராதி இவரு தவியானே நிறைவேறியது.

இப்போதும் யூனிவர்சிட்டி லெக்ஸிகன் ஆபீசுக்குத் தமிழ்ப்பண்டிதராய மர்ந்து அதற்குரிய சபையாராலும் சபைத்தலைவராலும் பல காலும் அறி வாலும் குணத்தாலும் புகழப்படுகின்ற தமிழ்ப்பண்டிதரான என்னருமையம் மான்சேய் ஸ்ரீமான் மு. இராகவய்யங்காரவர்கள். இவ்விராமநாதபுரச் சேதுப திகளாலாதரிக்கப்பட்ட வித்வத்பரம்பரையின ராய் நம் மாட்சிபொருந்திய சேதுபதி மஹாராஜரவர்களன் புக்குரியராயிவ்வூரராயிருத்தல் ஈண்டைக்கு நோக்கத்தகும்.

தமிழிலுள்ள எல்லா நூல்களிலும் தொல்காப்பியம் திருவள்ளுவர் இரண்டும் மிகச்சிறந்தன. அவ்விருநூலையும் முதற்கண் உலகுக்கு அச்சிடத் தொடங்கினாரிருவரும் இச்சேதுநாட்டாரே. தொல்காப்பியம் எழுத்திகா ரத்தை நச்சினார்க்கினியருரையுடன் முதற்கண் அச்சிட்டுதவினார் சேதுநாட்டு மழவராயனேந்தல் மகாலிங்கையர் என்பார். இவர் சென்னைக் சர்வகலா சாலைத் தலைமைப்பண்டிதராக இருந்தவர். திருக்குறள் 63 அதிகாரங்களைப் பரிமேலழகருரையுடனும், அதற்குத் தெளிபொருள்விளக்கத்துடனும், டுரு துரையின் ஆங்கிலமொழி பெயர்ப்புடனும் முதற்கண் வெளியிட்டவர் இவ்விராமாநுஜகவிராயரே. இவர் பாற்பயின்ற டாக்டர்போப் தாமியற்றிய

திருக்குறளாங்கிலமொழி பெயர்ப்புமுகவுரைக்கண் இவருடையகல்வித்திறத்தைப் பல்லாற்றானும் புகழ்ந்துள்ள். கல்வியில்லாமல் நெடிதுகழித்துப் பின் கலைமகள்கோயில் புக்குப் பன்னாள்வேண்டியும் கல்விபெறாது மனநொந்து உயிர்துறப்பானெண்ணித் தங்கழுத்தை வாளாளறுக்கும்போது நாமகள்தோன்றியனுக் கிரகித்ததனாலுடனே இவர்க்குக் கல்விவன்மையுண்டாயிற்றென்றும் பின் அறுத்தபுண்ணாறித் தழும்பாயிற்றென்றும் அதை, தாங்கண்கூடாகக்கண்டதென்றும், இவ்வரலாறு அவர் பொய்யாவுாவானே கேட்டதென்றும் டாக்டர்போப் தம் திருக்குறண்முகத்து வரைந்துள்ள.

பெறியசரவணக்கவிராயர்:- இவர் சேதுநாட்டு முதுகுளத்தூரினர். இவர் அவதான சக்தியைப் பலரும்வியப்பர். இவருடையகல்விப்பெருமிதம் சவ்வாதுப்புலவருக்குமேம்பட்டது. இவர் சேதுமுதற் சென்னைவரை ஆங்காங்குள்ள பிரபுக்களாற் கொண்டாடப்பட்டுச்சம்மானிக்கப்பட்டவர். சோமசுந்தரகுருவினிடத் தளவிலா அன்புபூண்டவர். சேது பதிநன்றியையே எந்தப் பிரபு இடத்தும் வாயாரப்புகழ்ந்துபாடுபவர். இவர் ஒருவனைக் கெடவும் வாழவும் பாடவல்லவர். இவருடையசெய்யுணடை கற்றோர்க்குப் பெரிதும் இன்பம்பயப்பது. இவர்பாடிய பிரபந்தங்களின்பெயர்களையும் பிரபுக்கள் பெயர்களையும் இவர் அவர்பாற் பெற்றவரிசைகளையும் எண்ணியெழுதின் இவ்வியாசம் இடம்போதா தாதலாற், சேதுபதிசம்பந்தமாக இவர்பாடலிற் காணப்படுவனவற்றை ஈண்டைக்கோதுவேன்.

''அரசிலுயர்ந்ததுரையாரெனிற்சேதுபதி
யாகுமவன்மணிவாயலி
லகத்தியமுனிக்குமதிகங்கற்றபேர்களா
யாயிரங்கவிவாணருண்
டவரிலொருசிறுவன்யான் பாடவறியேனென்
றகற்றிவிட்டார்களென்னை
யாதலாற்பூமியிற்சஞ்சரித்தேனின்
னகந்தனின்மகிழ்ந்ததருள்வையே''

''மகாராஜராஜருந்திறைதருஞ்சேதுபதி
வாசற்கவிப்ரசங்கன்
லண்டமிழிலக்கணச்சோமசுந்தரகுருசு
வாமியடிமைக்குமடிமை''

''அட்டதிசைபணிசெயுஞ்சேதுபதிமணிவாச

லட்டாவதானசிங்கம்''

''வித்வசனசேகரன்சேதுபதிவாசலில்விளங்குநவரத்னதீபம்''

''மகபதிநராதிபதிநீதிபதிசேதுபதிவாசற்ப்ரசண்டவாக்கி''

''செயராமநாதனேதெய்வந்தனுக்கோடிதீர்த்தமேதீர்த்தமெங்கள்
சேதுபதியேராஜனெனவணங்கார்களைச்சீறிவாயைக்கிழித்து''

இவற்றால் இவருடைய ராஜபத்தியுங் குருபத்தியுமறியலாம். இவர்,

''சேதுபதிவாசற்ப்ரதானிமுத்திருளப்பசிங்கவேறெதிர்ந்துகாண்க
செந்தமிழ்க்காதற்ப்ரபந்தமொன்றுன் மீதுசெய்துவந்தனமகிழ்ந்தே''

என்பதனாற் பிரதானி முத்திருளப்பிள்ளைமீது காதலொன்று பாடியுள்ளாரென்று தெரிவது. மற்று மிவர்பாடியது பணவிடுதூது என்றொன்றுண்டு. இவர்வாக்குச்சாதுர்யத்தை,

''வாருநீர்யாரென்னவித்துவானென்னவுமதிமோசம்வந்ததென்றே
வாய்குழறிமெய்யெலாமிகநடுக்குற்றுநீர்வந்தகாரியமேதெனச்
சீருலாவியகாமதேனுவேதாருவேசிந்தாமணிக்கு நிகர்வோய்
செப்புவசனத்தரிச்சந்த்ரனேயென்லுஞ்சினந்திருகணுஞ்சிவந்தே
ஆரைநீமாடுகன்மரமென்றுசொன்னதுமலாலரிச்சந்த்ரனென்றே
யடாதசொற்சொன்னையேயார்க்கடிமையாகினேனார்கையிற்பெண்டுவிற்றேன்
தீருமோவிந்தவசையென்றுரைசெய்வெகுகொடியதீயரைப்பாடிநொந்தேன்
திருமன்றுணடுநின்றுநடமொன்றுபுரிகின்றதென்றில்லைநடராஜனே''

என்னும்பாடலா னுாகித்தறிக. இவர் ஆங்காங்குநிகழ்த்தியவற்றை

''அரியலூர்வீரன்மேற்பாடியவனொருவீட்டையாயிரம் வீடாக்கிவைத்தோம்
அம்மைநாதன் பேரில்வண்ணம்படித்தவனையரசுநிலையிட்டுவைத்தோம்
ஆப்பனூர்க்குறவஞ்சிபாடியேகோடையுடனாடையும்விளையவைத்தோம்
ஆனந்தநாதனுக்குப்புதுச்சேரிதனிலழியாச்செல்வங்கொடுத்தோம்
கருதியசரதுநபாபுவையெதிர்வரச்சொலிக்காயிதமனுப்பிவைத்தோம்
கடலாடிமுத்துக்கறுப்பணன்வணந்தனைக்கற்றோர்க்கமுதமாக்கினோம்
காரைநகர்லக்ஷுமணமுதலிபுகழ்பெறநங்கடைக்கற்பார்த்துவிட்டோம்
கவித்தந்தன்னின்முத்தயமூப்பனைக்கற்பகாலமுமிருக்கவைத்தோம்
வரிசைபெறுபஞ்சமால்பண்டாரமுத்யோகமாறாதிருக்கவைத்தோம்
மற்றும்வனுக்கிளையபிச்சாண்டிசெட்டிக்குவச்ரதேகங்கொடுத்தோம்
வாடும் பயிர்க்குதிருக்கூடலூரிலேமழைபெய்யநாம்பாடினோம்

மகமதுத்தம்பிக்குநீடுழிசாகாவரத்தைக்கொடுத்துவிட்டோம்
திருவையாற்றுச்சுப்ரமண்யபிள்ளைக்குச்சிரஞ்சீவிதனையளித்தோம்
சேதுபதிவாசலவதானியாநம்மஹிமைதெரியாதபேருமுண்டோ
தெள்ளமுதுபோலவென்னுளமீதுபாடிவருசெந்தமிழ்நிறுத்தலாமா
சிவங்கையரசுபுரிவல்லவராசசெகமண்டலாதிபதியே''

என்னும் அரியபாடலானறிந்துகொள்க.

இவர்புத்ரர் **அருணாசலக்கவிராயர்.** இவர் சிவகங்கைக் கவுரிவல்லவ ராசரையும் கனிவாடித்தலைவரையும் பாடிய ஒலைத்தூக்கிற் சேதுபதியைப் புகழ்ந்துளர்.

''கைக்கடாசலகோடிதருசேதுபதிராசகர்த்தன்வாசற்ப்ரசங்கம்
கருதுவிருதவதானிசரவணப்பெருமாட்கவீச்சுரன்பெற்றரத்னம்
கமலைநாமகள்வளர்நிதானியருணாசலக்கவிவலவனெழுதுமோலை''

''தடக்கடலிடப்புவிபுரக்குமகுடத்தரசிற்பெரியசேதுபதிவா
சலிற்கனமாகத்துவமிகுத்திடுசிதத்துவசனப்ரபலசற்சனபரன்''

எனவருதானறிக

இவர்புத்திரர் **சிறியசரவணக்கவிராயர்:** இவர் பெரிய அவதானி. இவர் பாடியன **குன்றைச்சிலேடைவெண்பா, திருச்சுழியலந்தாதி, மதுரையமக வந்தாதி** முதலிய பலவாம். இவர் சேதுவேந்தர்பாற் பல்லக்கு முதலியவ ரிசை பெற்றார்

சுப்பிரமணியக்கவிராயர்:- இவர் சேதுநாட்டுச் சிவகங்கையைச் சார்ந்த ஆண்டுகொண்டான் என்ற ஊரினர். சேதுபதிமந்திரி கோட்டைத்தேவர் மீது திருமணக்குறவஞ்சிபாடியர். இவர்கவித்திறம்யாரும் புகழ்வது. இவரை **ஆண்டுகொண்டான்கவிராயர்** என்று வழங்குவர். இசைப்பதங்கள் பாடுதலி லும்வல்லவர். வடகலையினுங் கவிதைசொல்ல வல்லவர். இவர்பாற் கல்வி கற்றவர் **மழவராயனேந்தற் சின்னச்சாமி ஐயர்** என்பார். இவ்வையர்பாடி யது **பெரியபுராணக்கீர்த்தனை.**

கிருஷ்ணையங்கார். இவர் என்னருமைமாதுலர். சேதுபதிசின்னப் பிர தானி கிருஷ்ணையங்காருடைய பேரன்புதல்வர். அஷ்டாவதானத்தில் அதி கநிபுணர். வடமொழி தென்மொழி இரண்டினும் வல்லவர். சமயநூலா ராய்ச்சி பெரிது முடையர். இவருடையநுண்ணறிவோடு கூடிய வாதவன்மை, வடமொழிக்கடனிலைகண்ட வரும் சேதுவேந்தராலும் சேதுபதிமதி மந்திரி உலகம்புகழும் பொன்னுசாமித் தேவராலும் மிகவும் வெகுமானிக்கப் பெற்றவரும் பரதகண்ட முழுதும் புகழும் கல்வி அறிவொழுக்கங்கள் நிரம் பியவருமான மன்னார்குடி ராஜு சாஸ்திரிகளாலும் மெச்சப்பட்ட சிறப்புடை

யது. இவர்கவித்திறத்தை யடியில்வரும் வெண்பாவா னுய்த் துணர்ந்து கொள்க

''முக்காலோர்காலுக்குமுரிச்சிறப்புடைத்தென்

றெக்காலும்பேசவெழாரங்குப்-புக்காரும்

வண்டிருக்கப்பெற்றவருகக்விராமன்பவனி

கண்டிருக்கப்பெற்றார்களேல்''

முக்கால்-பரலோகம். ஓர்கால்-உலகம். வண்திருக்கு அப்புஎற்ற-வளவிய கண்ணினின்று ஆனந்தநீர் எற்றாநிற்க எ-று இவர் சேதுபதியைப்பாடிய வெண்பா:-

''சொன்னவருண்ணாவைத்துணிப்பேனவர்சிரத்தைச்

சின்னபின்னமாகசிதருவேன்-முன்னுதமிழ்த்

தென்னன்முத்துராமலிங்கச்சேதுபதிபோலவொரு

மன்னனுளனென்றுண்மதித்து.''என்பது.

முத்துச்சாமிஐயங்கார்:-இவர் என்னருமைமாதுலரும் எனது தமிழாசிரியருமாவர். இத்தமிழ்சங்கத்தைத் தொடங்கிநடத்திய பெரிய தமிழபிமானியாகிய பாண்டித்துரைத்தேவர்க்கும் தமிழாசிரியர் இவரே. இவர் அதிபாலியத்திற் கன்னடநாட்டரசராகிய **கிருஷ்ணராஜஉடையார்** முன்புகன்னடபாஷையில் அஷ்டாவதானம் புரிந்து பல்லக்கு, குடை முத்துமாலை பொற்குவை இவை பரிசிலாகப் பெற்றவர். இவருடைய உரைவன்மையுங் கவித்திறமுங் கற்றார்பலரும் புகழ்வன. இவரியற்றிய நூல்கள் **சந்திராலோகம், மணவாளமாமுனிநூற்றந்தாதி நூற்றெட்டுத் திருப்பதிப்பதிகங்கள், குருகைக்கலம்பக** முதலியன. இத்தமிழ்சங்கம் இவர்பாற்சிறப்பித்து நன்றிபாராட்டுங் கட்ப்பாடுடைத்து. என்னையெனின், தமிழ்ச்சங்கஸ்தாபகரான பாண்டித்துரைத்தேவர் இவர்மாணாக்கராதலானும், ''செந்தமிழ்'' பத்திரிகையை முதற்கட்டொடங்கி நடாத்திய ஏழையேன் இவருக்கு அன்புள மருகரு மாணாக்கரு மாதலானும், எனக்குப் பின் அப்பத்திரிகையைச்சிர்பெறநடாத்தினாராகிய வித்வான் **மு.இராகவையங்கார்** இவர் திருக்குமாரர் ஆதலானும், அவர்க்குப்பின் இப்போது அப்பத்திரிகையை இனிதுநடத்தும் வித்வான் **திரு.நாராயணையங்கார்** இவர்மாணாக்கராதலானும், கலாசாலைப் போதகாசிரியராயுள்ள வித்வான் **அரங்கசாமிஐயங்கார்** இவர்மாணாக்கராதலானுமென்க. இவர் அளவிலாக்கருணையே ஏழையேனை இப்பேரவைக்கண் நிறுவியது. இவர் சேதுபதியன்னப்ரபாவத்தாற்றமிழ் வளர்த்தவரென்ப தியான்கூறித் தெரியவேண்டியதன்று. இவர் அவதானசக்தி திரிசிரபுரம் மஹாவித்வானும், இத்தமிழுலகுசெய்ததவப் பயனாகவிளங்கிய மஹாகவியும், நூற்றுக்கணக்கான பெருந்தமிழறிஞர்க்

கெல்லாம் நற்றமிழாசிரியருமான **மீனாக்ஷிசுந்தரநாவலரா**ன் வியந்து பாராட்டப்பட்டசிறப்புடையது.

இத்தமிழ்வலாரன்றிச் சாத்தணிச் சரவணைப்புலவர், முத்துவேலா யுதக் கவிராயர், சுப்பிரமணியக்கவிராயர், கருங்குளம் சங்கரநாராயண அவ்தானி, சொக்குப்புலவர், நாகலிங்கப்புலவர், அநந்தகவி, மாசிலா மணிப் பண்டாரம், ஆவிடைநாதர், பெரியமுத்துமாரியப்பக்கவிஞர், திருப்புத்தூர் வாலசரசுவதி, சிறியமுத்துமாரியப்பக்கவிராயர், வேலாயுதக்கவிராயர், முத்துவீரப்பக்கவிராயர். நரசிம்மபாரதிமுதலிய பலர் செந்தமிழறிஞராய் இச்சேதுவேந்தரால் வரிசைபலபெற்று வாழ்ந்தன ரென்றும் தெரியலாம். ''மொய்யார்கலிசூழ்முதுபாரின்முகந்துதானக் கையார்புனலான்னையாதன கையுமில்லை'' என்றபடி முற்காலந்தொட்டு இக்காலம்வரை சிறந்ததமிழ்ப் புலவராயினார் பெரும்பான்மையாக எல்லாரும் இச்சேதுபதிகள் வண்மை பெற்றனரேயாவர் என்பது சிறிது ஆராய்ந்துபார்க்குமிடத்துப் புலனாம்

மன்னார்கோயிலில் வடமொழிக்கடனிலைகண்ட பிரும்மஸ்ரீ ராஜு சாஸ்திரிகளும், பெரியதமிழறிவாளரும் சிறந்த சைவானுஷ்டான சீலரும் உபகாரியுமாகிய நல்லூர் ஆறுமுகநாவலரும் இச்சேதுவேந்தர் மதிமந்திரி உலகுபுகழும் பொன்னுச்சாமித்தேவரவர்கள்கைவண்மைக்குப் பாத்திரரான சிறப்புப் பண்டே யாவருமறிந்தது.

இவ்வாறுமுகநாவலர்வெளியிட்ட அரியபெரியநூல்களனைத்தும், இச்சேதுவேந்தர்பொருளையே துணையாகக்கொண்டன என்பது அவ்வந்நூான் முகவுரையானும் சிறப்புப்பாயிரச்செய்யுட்களாலும் நன்கு ணர்ந்துகொள்ளலாம். முற்காலத்தும் சேதுநாடாண்டபாண்டியராலே தமிழ்ச் சங்கம் நிறுவப்பட்டது. இக்காலத்தும் அந்நெறிதவறாது சேதுநாட்டுப்பாண்டியராலே இச்சங்கம் சீர்பெறநிறுவப்பெற்றது. தமிழ் என்றும் பாண்டியர்தமிழேயன்றோ? ''வீயாத்தமிழுடையான் பல்வேற்கடற்றானைப்பாண்டியன்'' என்பது பழையவழக்கு.

அத்தகைப்பாண்டியர்க்குப்பின் அவ்வருமைப்பெயர்புனையத்தக்கார் இச்சேதுபதிமரபினரே என்பது மேற்கூறியவாற்றான் இனிது விளங்கும். இச்சேதுபதிகள் தமிழ்மாட்டு அன்பும் ஆதரவும் உடையர் என்பதுமட்டு மன்றித் தமிழ்க்கல்விவன்மையுமுடையரென்பது, ''கவி மதுர, வாக்குந்தமைத்தரகுநாதன்'' என ரகுநாதக்கோவையிற் கேட்கப்படுதலானும், மாட்சி பொருந்திய மஹாராஜரவர்கள் திருப்பாட்டனாராகிய **முத்துராமலிங்கசேதுபதியவர்கள்** முதலாக மூன்றுதலைமுறைச் சேதுபதிகள் இனியதமிழ்க்கவி வலவராயிருத்தல் இங்குள்ளார்பலர் கண் கூடாகக்கண்டதொன்றாதலானும் யான்வேறே புதிதாக உரைக்கவேண்டுவதொன்றன்று. **தளசிங்கமா**

லையனும் ''கானையினீசர்பதம்போற்றியேத்தி'' என்றார். இதற்கேற்பவே தளவாய்சேதுபதி கானப்பேரெயில் ஈசரைப்பாடியபாடல்கள் அத்தலத்து இன்னும் வழங்குவன. அவகாச மின்மையால் அவற்றைப்பெற்று ஈண்டெ மூதிக்காட்ட இயலவில்லை.

நம் மாட்சிமைபொருந்திய மஹாராஜரவர்கட்குத் திருத்தந்தையாரும் பெருங்கொடைவள்ளலுமாகிய பாஸ்கரசேதுபதிமஹாராஜர் இத்தமிழின் பால்வைத்த அன்பு அவர்கள் இச்சங்கத்துக்களித்த பெருங்கொடையானும், பிறநாட்டரசரை இத்தருமத்தில் தூண்டிப்புரிவித்த நல்லுதவிகளானும், தமிழ்ப்புலவர்க்களித்த பெருங்கொடையானும் யாவரும் அறிந்ததேயா தலின், பெயர்த்துங்கூறவேண்டியதொன்றன்று. இவர்களது தமிழபிமானத் தையும், தமிழ்வண்மையையும் யான் பலகாலும் அனுபவித்துள்ளேன். பாஸ்கரசேதுபதிபண்ணிய புண்ணியமெல்லாந் திரண்டு ஒருருவெடுத்த னைய நம் சேதுபதிமஹாராஜர் அவர்கள் இச்சேதுராஜ்யாபிஷேகஞ்செய்தரு ளியகாலந்தொட்டு இத்தமிழ்மாட்டுத்தம் பெருங்குலத்தோரொப்ப ஆராவன் புகாட்டி ஒவ்வொருசரஸ்வதி பூஜையினும் பெருந்தமிழ்ப்புலவரையழைத்த ளிக்கும்பெருங்கொடையாமெல்லாங் கண்கூடாகக்கண்டதொன்றே. இதனை

''புலவரைப்போற்றுவதேகலைவாணிக்குப்பூசையென்று
நிலவரையாள்கின்றவேந்தரினின்போனினைந்தவர்யார்
சலவரைப்போற்றுதல்செய்யாமலென்றுந்தலைசிறந்த
நலவரைப்போற்றியசீராஜராஜநரேந்திரனே''

என்று யான் அன்பாற்பாடியுள்ளேன். இக்காலத்துள்ள சிறந்ததமிழ்ப் புல வரில் இச்சேதுபதிமன்னரை உற்றவாறுபுகழாதார் ஒருவருமிலரென்றுசொல் லத்துணியலாம். இதனால் இத்தமிழ்வளர்க்குந்தருமம்இம்மன்னர்குலதரும மென்பது தெளிவாம். இத்தகைத்தமிழ்வேந்தரைத் தலைவராப்பெற்றது இத்தமிழ்ச்சங்கத்துக்குப் பெருஞ்சிறப்பேயாம். இத்துணையுங்கூறிய வாற்றால் இச்சேதுநாடு முன்புதொட்டுத் தமிழாற்சிறந்த தென்பதும், சேது வேந்தராதரவாற்றலைத்த தமிழாசிரியர் பலரான்மலிந்ததென்பதும், புண்ணி யச்சிறப்புடன்தமிழ்வளர்த்தசிறப்பும் இதற்கேயுரியதென்பதும், பிற்றைக்கா லத்தரசர் எல்லாரினும் இச்சேதுவேந்தரே தமிழபிமானிகளாய்த் தமிழ்காத் தவரென்பதும் என்றுபுலனாம். இத்தகைச்சேதுமன்னர்திருமரபும் அவர் போற்றும் திருத்தமிழும் தமிழ்வள்ளன்மையும் நீடுவாழ்கவென்று வாழ்த்து வதுடன் இத்தமிழ்ச்சங்கத்துக்கும் அதன் தலைவராயுள்ள நம் மஹாராஜரவர் கட்கும் எல்லாநன்மையுந்தந்தருளுமாறு எல்லாம்வல்ல இறைவன்றிரு வடி களைச் சிந்திக்கின்றேன்.

எல்லோர்க்கும் தொல்காப்பியம்

பேரறிஞர் நா.பாலுசாமி

(சொல்-வேற்றுமைஇயல்)

(முன் இதழ்த் தொடர்ச்சி...)

சூத்திரம்-73

(மூன்றாம்வேற்றுமை)

மூன்றா குவதே
ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
வினை முதல் கருவி அனைமுதற்றதுவே

(ப.ரை) ஒடு எனப்பெயரிய - ஒடு என்ற பெயரால் குறிக்கப்பெற்ற, வேற்றுமைக் கிளவி- வேற்றுமைச் சொல், மூன்று ஆகுவது - மூன்றாம் வேற்றுமைக்கு உரிய உருபாகும், அது - அவ்வுருபு,வினைமுதல் - ஒருசெயல் நிகழ்வதற்கு மூலமாகிய, கருவி - கருவியைக் குறிக்கும், அது அனை முதற்று - அவ்வேற்றுமை உருபு அத்தகைய அடிப்படையை உடையது.

மூன்றாம், வேற்றுமைக்கு உரிய உருபு முற்சொல்லப்பட்ட ஒடு என்பதாகும்; அவ்வுருபு கருவிப்பொருளைத்தரும், ஆனால்

இக்காலத்தில் இது இப்பொருளில் பெரும்பாலும் வருதல் இல்லை. ஆன் உருபும் மூன்றாம் வேற்றுமைக்கு உரியதே; இது சூத்திரத்தில் வெளிப்படையாகக் கூறப்படவில்லை. உரையால் கொள்ளப்பட்டது. எனவே **ஒடு, ஆன்** இரண்டும் மூன்றாம் வேற்றுமை உருபுகளாம். இவை கருவிப்பொருள்தருவனவாம் ; பின்வரும் சூத்திரம் இதனைமேலும் விளக்கும்.

(வி.ரை) வினை - செயல், தொழில் , கருமம். முதல் - மூலம், அடிப்படை அனை - அனைத்து, அம்மட்டே. ஏ - அசை. முதற்று - அடிப் படையை உடையது; குறிப்பு வினைமுற்று. கிளவி - உருபு மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஒடு, ஆன் எனபனவாம்.

(எ-டு) தந்தையொடு மகன் வந்தான் - தந்தை காரணம் (கருவி) மகன் வருதலுக்குத் தந்தை கருவி. வேலான் எறிந்தான் - ஆன் - கருவி; வேல் கொண்டு எறிந்தான் என்பது பொருள். இனி, நன்னூல் ஆசிரியராகிய பவணந்தி முனிவர் தன் காலத்திற்கு ஏற்ப மூன்றாம் வேற்றுமை உருபுகள் ஒடு, ஓடு, ஆல், ஆன் என்று விரித்து உரைத்துள்ளார். இவர் கருத்தின்படி மூன்றாம் வேற்றுமை கருவி, கருத்தா, உடன் நிகழ்ச்சி ஆகிய மூன்று பொருள்களில் வரும்.

(எ-டு) வாளால் (ஆல்)எறிந்தான் - கருவிப்பொருள்

வாளான் (ஆன்)

தந்தையொடு (ஒடு) மகன்வந்தான் - உடன் நிகழ்ச்சிப் பொருள்
தாயோ (ஓடு) மகள் வந்தாள் - உடன் நிகழ்ச்சிப்பொருள்

அரசனால் கோயில்கட்டப்பட்டது -கருத்தாப் பொருள்.

சூத்திரம் :74

(மூன்றாம்வேற்றுமைப் பொருள்பாகுபாடு)

அதினின் இயறல் அதன்தகு கிளவி
அதன்வினைப் படுதல் அதனின் ஆதல்
அதனிற் கோடல் அதனொடு மயங்கல்
அதனோடு இயைந்த ஒருவினைக் கிளவி

அதனோடு இயைந்த வேறுவினைக் கிளவி
அதனோடு இயைந்த ஒப்பல் ஒப்புரை
இன்னான் ஏது ஈங்கென வரூஉம்
அன்ன பிறவும் அதன்பால என்மனார்.

(ப-ரை) 1. அதனின் இயறல் - அதனில் உருவாதல்

(எ-டு) மண்ணின் இயன்ற குடம்; மண்ணே (முதல்காரணம்)குடமாக உருவானது.

2. அதன் தகு கிளவி - அதன் தகுதி உடையது.

(எ-டு) அறிவான் அமைந்த சான்றோர்; அறிவின் தகுதியால் சான்றோர் ஆயினர்.

3. அதன் வினை படுதல் - அதனான் செயல் முடிதல்; (வினை-செயல்,காரியம்)

(எ-டு) கண்ணனான் முடியு ம் இக்காரியம்; காரியம் முடிதற்குக் கண்ணன் காரணம்.

4. அதனின் ஆதல் - அதனான் ஆகுதல்

(எ-டு) வாணிகத்தான் ஆயினான்; வாணிகம் காரணம்

5. அதனின் கோடல் - அதனான் கொள்ளுதல். கோடல் - வாங்குதல்

(எ-டு) காசாற் கொண்ட (வாங்கிய) அரிசி; காசு - பணம் (இவை ஐந்தும் ஆன் உருப்பிற்கே உரியனவாகக் கூறப்பட்டது)

6. அதனொடு மயங்கல் - அதனொடு கலத்தல்; மயங்கல் - ஒன்றுபடல்

(எ-டு) பாலொடு தேன் மயங்கியது; பாலும் தேனும் சேர்ந்தன

7. அதனோடு இயைந்த ஒரு வினை கிளவி - அதனோடு பொருந்திய ஒரே விதமான செயல் ; வினை - செயல்

(எ-டு) கணவனோடு மனைவி வந்தாள், ஆசிரியரோடு மாணவன் வந்தான். மனைவியும் மாணவனும் வருதற்குக் காரணம் கணவனும் ஆசிரியரும் ஆவர்.

8. அதனோடு இயைந்தவேறு வினை கிளவி - அதனோடு பொருந்திய மாறு பட்டசெயல்.

(எ-டு) மலையோடு மோதியயானை; இங்கு மோதுதல் யானையின் தொழில்; மலையானது அன்று . எனவே மலைக்கும் யானைக்கும் இதுவேறுபட்ட செயலாகும்

9. அதனோடு இயைந்த - அதனோடு பொருந்திய, ஒப்பல் - ஒப்பல்லாத, ஒப்புரை - ஒப்புமை உடையது.

(எ-டு) பொன்னொடு இரும்பனையர் உன்னொடு பிறர், விலங்கொடு மக்கள் அனையர். இத்தொடர்களில் பொன்னும் இரும்பும் ஒப்பல்லாத ஒப்புமைகள்; அவ்வாறே விலங்கும் மக்களும் ஒப்பிலா ஒப்புக்கள். பொன்னும் இரும்பும் தம்முள் மாறுபட்டவை; விலங்குகளும் மக்களும் மாறுபாடுடையன. எனினும் ஒருவகையில் அவ்விரட்டைகள் ஒற்றுமை உடையன வாதலால் ஒப்புமைகூறப்பட்டது. முன்னவை உலோகம் (கனிமம்) என்பதாலும் பின்னிரண்டும் மன உணர்வு தவிர்ந்த பிற வந்தாலும் ஒப்புடையனவாகும். எனவே, ஒப்பில்லாத ஒப்புரைகள் ஆயின.

இன், ஆன், ஏது - இன், ஆன் ஆகிய மூன்றன் மாற்றுருபுகள் ஏதுப்பொருளில் (காரணம்) வந்துள்ளன.

(எ-டு) கல்வியிற் பெரியன்கம்பன், புகை உள்ளதால் நெருப்பு உண்டு முதலியன.

ஈங்கு என வருஉம் - இவ்வாறு வருவனவும், அன்ன பிறவும் - அவை போல்வனபிறவும், அதன்பால - அந்த மூன்றாம் வேற்றுமை இடத்தனவாம், என்மனார் - என்று கூறுவர் அறிஞர்.

(வி.ரை) வரூஉம் (வரும்) அளபெடை. மேலேகூறப்பட்ட ஒன்பது வகைப் பொருள் பாகுபாடுகளும் ஒருவகையில் கருவிப் பொருளை உணர்த்துதலின் மூன்றாம் வேற்றுமைத் குரியனவாயின. இன்னான் - இன் + ஆன் (உம்மைத் தொகை) இன்னும் ஆனும் என விரிக்க) ஏது - காரணம். காரணம் மூவகைப்படும். முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் என்பன அம்மூன்றும். குடம் வினைந்தான் என்ற தொடரில், குடம் - காரியம்; வனைதல் - தொழில், காரியம். குடம் செய்வதற்கு மண், சக்கரம், குலாலன் ஆகிய மூன்று உறுப்புக்கள் தேவை. மண் - முதற்காரணம்; இதுவே குடமாக (காரியமாக) மாறுகிறது. சக்கரம் - துணைக் காரணம்; குலாலன் (வனைவோன்) நிமித்த காரணம் . இவ்வளவு விரிவாகவும் விளக்கமாகவும் கூறப்பட்ட தொல்காப்பியச் செய்திகளைப் பவணந்தியார் (நன்னூல் ஆசி

ரியர்) சுருங்கச் சொல்லிவிளங்க வைத்துள்ளமை இப்பகுதியில் முன்னர்க்கூறப்பட்டதென அறிக.

சூத்திரம் 75

(நான்காம் வேற்றுமை உருபு)

நான்காகுவதே
குஎனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
எப்பொரு ளாயினும் கொள்ளும் அதுவே.

(ப.ரை) குஎன. பெயரிய - மேலே கு என்னும் பெயரால் குறிக்கப் பெற்ற, வேற்றுமை கிளவி - வேற்றுமை உருபு, நான்கு ஆகுவது - நான்காம் வேற்றுமைக்கு உரியது, அது - அவ்வுருபு, எப்பொருள் ஆயினும் கொள்ளும் - எவ்வகையான பொருளையும் ஏற்கும் தன்மையது.

நான்காம் வேற்றுமை உருபு கு என்பதாம். அது எத்தகைய பொருளையும் ஏற்கும்; நான்காம் வேற்றுமைக்கு உரியது கொள்ளுதல் பொருள்; என்றாலும் பிறவேற்றுமைகளுக்குரிய பொருளோடும் மயங்கி வரும் தன்மையது; ஆதலால், 'எப்பொருளாயினும்' எனப்பொதுப்படக் கூறப்பட்டது.

(வி-ரை) நான்காம் வேற்றுமையாகிய' கு' உருபு கோடல் (கொள்ளுதல், பெறுதல், அடைதல்) பொருளில் வரும் .

(எ-டு) கண்ணன் அரசுக்கு வரி செலுத்தினான்; வள்ளல் இரவலர்க்குப் பரிசு அளித்தான் எனவரும். விரிவும் விளக்கமும் அடுத்த சூத்திர உரையிற் காணவும்.

(பொருளின் பாகுபாடு)

அதற்குவினை உடைமையின் அதற்குஉடம் படுதலின்
அதற்குப்படு பொருளின் அது ஆகு கிளவியின்
அதற்குயாப்பு உடைமையின் அதன்பொருட்டு ஆதலின்
நட்பின் பகையின் காதலின் சிறப்பின் என்று
அப்பொருள் கிளவியும் அதன்பால என்மனார்.

(ப.ரை)1. அதற்கு வினை உடைமை - அதற்கு உதவுவது;

(எ-டு) நெல்லுக்கு வேலிஅமைத்தான். இங்கு அமைத்தல் - தொழில், உபகாரம், உதவுதல். வேலி நெல்லுக்குப் பாதுகாப்பு. வேலியின் உதவியை (பயனை) நெல் அடைகிறது. நெல் வேலியின் பயனைக் கொள்கிறது; அஃதாவது கோடல்பொருள் என்பதாம்.

2. அதற்கு உடன்படுதல் - அதற்குச் சம்மதித்தல்; மனம் இயைவது.

(எ-டு) கண்ணன் மணத்திற்கு (கல்யாணம்) உடன்பட்டான். இங்கு உடன் படுதலை ஏற்பது மனம். உடன் படுதல்-ஒப்புக்கொள்ளுதல்.

3. அதற்கு படு பொருள் - அதற்கு உரிமையாதல்,

(எ-டு) உடம்புக்குக் கூறு கை; கை உடம்பின் ஒரு கூறாய்ப்பட்டது. படு பொருள்-பட்டபொருள். ஒரு பொதுப்பொருளைப் (உடம்பை) பகுக்கும் போது, அதன் ஒரு பங்கில் படும் பொருள் (கை,கால்,போன்றவை)

4. அது ஆகு கிளவி - அது அதுவாகவே ஆகிவிடும் பொருள்.
(கிளவி - பொருள்)

(எ-டு) தாலிக்குப் பொன் - இதில் பொன் தாலியாகவே ஆகிவிடுதல் காண்க. அது-பொன், அது ஆக - தாலி ஆக.

5. அதற்கு யாப்பு உடைமை - அதற்கு இன்றியமையாமை;பொருந்துவதும் ஆகும்.

(எ-டு) பாட்டுக்கு இசை அமைத்தான், நோய்க்கு மருந்து உண்டான். இவற்றில் இசையும் மருந்தும் முறையே பாட்டுக்கும் நோய்க்கும் இன்றியமையாத வையாகும். இன்றியமையாமை - இல்லாமல்

முடியாது.

6. அதன் பொருட்டு ஆதல் - அதன் காரணமாதல்.

(எ-டு) வெயிலுக்குக்குடை பிடித்தான், உணவுக்கு உழைத்தான். வெயிலின் பொருட்டுக் குடை, உணவின் பொருட்டு உழைத்தல்.

7. நட்பு - சிநேகம், நேயம், தொடர்பு, நெருக்கம்,

(எ-டு) கண்ணனுக்கு நட்பினன் மணிவண்ணன்

இராமனுக்குச் சிற்றன்னை கைகேயி

8. பகை - பாம்பிற்குக் பகை கீரி

9. காதல் - (நிறைந்த அன்பு) காதலிக்குக் காதலன் பூச்சூட்டினான்

10. சிறப்பு - பெண்ணுக்குப் பெருமைதருவது கற்புடைமை.

11. அப்பொருள் கிளவி - மேற்கூறப்பட்ட அனைத்தும்

அதன் பால - நான்காம் வேற்றுமைக்கு உரியன

என்மனார் - என்று அறிஞர் கூறுவர்.

(வி.ரை) என்ப என்னும் வினைமுற்று என்மனார் என வந்தது. அப்பொருள் கிளவியும் - பிணிக்கு மருந்து என்பது போன்றவற்றைக் கொள்க.

நான்காம் வேற்றுமை உருபு 'கு'. இதன்பொருள் கோடல் (கொள்ளுதல்).

சூத்திரம் 77

(ஐந்தாம் வேற்றுமை உருபு)

ஐந்தாகுவதே
இன்னனப் பெயரிய வேற்றுமைக் கிளவி
இதனின் இற்றிது என்னும் அதுவே.

(ப.ரை) இன்னன பெயரிய - இன் என்னும் பெயரை உடைய, வேற்றுமை கிளவி- வேற்றுமை உருபு, ஐந்து ஆகுவது - ஐந்தாம் வேற்று மைக்கு உரியது, அது - அவ்வுருபு, இது இற்று என்னும் -

இப்பொருளின் இத்தன்மையது என்று சுட்டும்.

ஐந்தாம் வேற்றுமை உருபு 'இன்' என்பதாம். இப்பொருளிலிருந்து இத்தகையது இப்பொருள் என்னும் பொருளை உணர்த்திநிற்கும்.

(வி.ரை) இது - இப்பொருள். இற்று - இத்தன்மையது (குறிப்பு வினை முற்று) பெயரிய- பெயரைஉடைய. இதனின் இது - இந்தப் பொருளிலிருந்து இந்தப்பொருள் (பிறிதொருபொருள்). ஏ-அசை. கிளவி-உருபு.

(எ-டு) மதுரையின் கிழக்கு மானாமதுரை; சென்னையின் தெற்கு செங்கற்பட்டு - இவற்றுள் ஒன்றிலிருந்து ஒன்று எனும் பொருள் படுதல் காண்க. இது எல்லைப் பொருள் எனப்படும். அதிகமானின் இன்னன் ஆதன் (இன்னன்-இத்தன்மையன்) இவ்வாறு உயர்திணைக்கும் 'இன்' உருபு வரும். இவ்வேற்றுமைப் பொருளின் விரிவு அடுத்த சூத்திரத்தில் காண்க.

சூத்திரம் 78

(பொருட்பாகுபாடு)

வண்ணம் வடிவே அளவே சுவையே
தண்மை வெம்மை அச்சம் என்றா
நன்மை தீமை சிறுமை பெருமை
வன்மை மென்மை கடுமை என்றா
முதுமை இளமை சிறத்தல் இழித்தல்
புதுமை பழமை ஆக்கம் என்றா
இன்மை உடைமை நாற்றம் தீர்தல்
பன்மை சின்மை பற்று விடுதல் என்று
அன்ன பிறவும் அதன்பால என்மனார்.

(ப.ரை) வண்ணம் - நிறம், வடிவு - வடிவம், அளவு - அளத்தல், சுவை - சுவைத்தல் (நாவின்தொழில்) தண்மை - குளிர்ச்சி, வெம்மை - வெப்பம், அச்சம் - பயம், என்றா - என்றும், நன்மை - நற்செயல்,

தீமை - தீயசெயல், சிறுமை - தரக்குறைவு, பெருமை - பெருந் தன்மை, வன்மை -வலிமை, மென்மை - மெல்லியதன்மை, கடுமை - கொடுமை, என்றா - என்றும், முதுமை - தளர்ச்சி, இளமை - துடிப்பு, சிறத்தல் - சிறப்படைதல், இழித்தல் - நிந்திக் கப்படுதல், புதுமை - புதியதாம் தன்மை, பழமை - நாள்கழிதல் தன்மை, ஆக்கம் - வளர்ச்சி அல்லதுபெருக்கம், என்றா - என்றும், இன்மை - வறுமை, உடைமை - செழிப்பு, நாற்றம் - மணம், தீர்த்தல் - நீங்குதல், பன்மை - பல, சின்மை - சில, பற்றுவிடுதல் - பற்றறுத்தல், என்று - என்றும் கூறப்பெற்றவற் றுடன், அன்ன பிறவும் - அப்படிப்பட்ட மற்றவையும், அதன் பால - அந்த ஐந்தாம் வேற்றுமையிடத்தவாம் என்மனார் - என்பர் அறிஞர்

வண்ணம் முதல் பற்றுவிடுதல் முடியக் கூறப்பட்டவையும் அவைபோல் வன பிறவும் ஐந்தாம் வேற்றுமைக்குரிய பலதிறப்பட்ட பொருட் பாகுபாடுகளாகும்.

(வி.ரை) வண்ணம் - நிறம்; வெண்மை கருமை முதலியன; வடிவு - வட்டம், சதுரம் முதலியன; அளவு - நீட்டம், குறுக்கம் முத லியன; சுவை - கைப்பு, உவர்ப்பு, புளிப்பு முதலியன; நாற்றம் - நறு நாற்றம், தீநாற்றம் முதலியன. என்றா - என்றும்; எண்ணிக் கையை உணர்த்தும் ஓர் இடைச் சொல். அதன்பால - அதன் பகு திகள்; பால - பகுதியன.

(எ-டு) வண்ணம் - காக்கையிற் கருமை களம்பழம் (இல் - ஒப்புப் பொருள்); காக்கையைப் போலக்களம்பழம் கரியது.

வடிவு	-	இதனின் அது வட்டமானது
அளவு	-	நாழியிற் சிறியது அரைநாழி - தொடரும்
சுவை	-	தேனின் இனியது இக்குழந்தையின் பேச்சு
தண்மை	-	நீரின் குளிர்ந்தது இவன் நெஞ்சு
வெம்மை	-	நெருப்பின் வெவ்விது இவள் தீச்சொல்
அச்சம்	-	கள்ளரின் அஞ்சுவர் கயவர்
நன்மை	-	கற்றலிற் கேட்டல் நன்று
தீமை	-	கள்ளின் தீயது காமம்

சிறுமை	-	பொய்யிற் சிறுமைத்து பொறுமை இழத்தல்
பெருமை	-	அறிவிற் பெருமைத்து அடக்கம்
வன்மை	-	பொருளின் வலியது ஊக்கம்
மென்மை	-	மலரின் மெல்லிது விருந்தினர் மனம்
கடுமை	-	வேலின் கடுமை வெஞ்சொல்
முதுமை	-	அதிகனின் முதியர் அவ்வையார்
இளமை	-	அரசனின் இளையோர் அலுவலர்
சிறத்தல்	-	கற்பிற் சிறந்தது நாணம்
இழித்தல்	-	இரப்பின் இழிந்தது ஈயேன் என்றல்
புதுமை	-	இதனிற் புதிது இவ்வாடை
பழமை	-	பல்லவரிற் பழையர் பாண்டியர்
ஆக்கம்	-	பொன்னின் ஆயது பூண்
இன்மை	-	வறுமையின் இன்மை வறுமையே
உடைமை	-	உடைமையின் உடைமை உள்ளம் உடைமை
நாற்றம்	-	மலரின் நாற்றம் மகளிர் கூந்தல்
தீர்தல்	-	பழியின் தீர்ந்தான் (நீங்கினான்)
பன்மை	-	பவளத்தின் பலவாம் முத்து
சின்மை	-	பள்ளியிற் சிலவாம் பல்கலைக்கழகம்
பற்றுவிடுதல்	-	பற்றுவிடற்குப் பரமன்பாதம் பற்றுக

இதுகாறும் கூறிய பொருட்பாகுபாடுகளும் இச்சூத்திரத்திற்குக் கூறப்பட்ட உரைகளும் ஐந்தாம் வேற்றுமை உருபுகள். 'இல்' 'இன்' ஆகிய .இரண்டு என்பது தெளிவாம் ஒப்புப்பொருள், உறழ்ச்சிப்பொருள், ஏதுப்பொருள் முதலிய பொருள்களில் ஐந்தாம் வேற்றுமை வரும் என்பது அறிக..

தொடரும்....

அபிராமி அந்தாதி

ABIRAMI ANTHATHI

பேரறிஞர் அ.தட்சிணாமூர்த்தி

நாயே னையுமிங் கொரு பொரு ளாக நயந்து வந்து
நீயே நினைவின்றி யாண்டு கொண் டாய்நின்னை யுள்ளவண்ணம்
பேயே னறியு மறிவுதந் தாயென்ன பேறு பெற்றேன்
தாயே! மலைமகளே செங்கண் மால்திருத் தங்கச்சியே!

I am a soul mean like a dog;
Yet Thou took me too into account
And willingly condescended to grant me
Thy Servitorship not weighing my worth!
I am a ghoul whom Thou invested with
The wisdom to realise Thee!
What great a boon I ' ve been blessed with,
Oh mother, Himavan's daughter and Vishnu's sister!

(61)

தங்கச் சிலைகொண்டு தானவர் முப்புரம் சாய்த்து மத
வெங்கட் கரியுரி போர்த்த செஞ்சே மெய்யடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகிகோகனதச்
செங்கைக் கரும்பும் மலருமெப் போதுமென் சிந்தையதே!

Lord Shiva the perfect warrior, in days of yore annihilated
The Asuras' castle three fold wielding
His Low the golden Meru; He stripped off
The ichorus tusker of wrathful eyes
And wore its skin; Abirami, the Supernal Mother
Of the Universe with Her tight embrace
Left on His person the impress of Her breasts,
Verily tender coconut fruit;
Her Sugarcane low and flower darts
Ever abide in mine heart!

(62)

தேறும் படிசில ஏதுவும் காட்டிமுன் செல்கதிக்குக்
கூறும் பொருள் குன்றிற் கொட்டும் தறிகுறிக் குஞ்சமயம்
ஆரும் தலைவி யிவளா யிருப்ப தறிந்திருந்தும்
வேறும் சமயமுண்டென்றுகொண் டாடிய வீணருக்கே!

There are mean wastrels who think,
There are still other creeds to follow,
In spite of their knowing that Abirami heads
All the six creeds spoken in the sared Vedas!
Alas, the worthy and well-illustrated advice
To put them on the path of salvation
Is proved futile, like a wooden wedge
Pitched on a mountain.

(63)

வீணே பலிகவர் தெய்வங்கள் பாற்சென்று மிக்க வன்பு
பூணே னுனக்கன்பு பூண்டுகொண் டேனின் புகழ்ச்சியன்றிப்
பேணே னொருபொழுது துந்திரு மேனிப்ர காசமன்றிக்
காணே னிருநில முந்திசை நான்கும் ககனமுமே

I will not approach the little deities
Who in vain accept offerings of devotees;
Nor will i have limitless love for them
I am Thy humble servant
And I will not praise other gods but Thee!
I will not behold with mine eyes
The things on earth, directions and the heaven
But the divine madiance emanating from Thy sacred Body.

(64)

ககனமும் வானும் புவனமும் காணவிற் காம னங்கம்
தகனமுன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும் செம்
முகனுமுந் நான்கிரு மூன்றெனத் தோன்றிய மூதறிவின்
மகனுமுன் டாயதன் றோவல்லி நீ செய்த வல்லபமே!

Oh Vine - like Abirami!
The sagely Shiva in days of yore
Reduced to ashes the frame of Manmatha
The wielder of sugarcane bow
To be witnessed by all
In the space, the heaven and the terrestrial world!
To Him Thou bore a son of supernal wisdom
Who is endowed with twelve hands and six ruddy faces!
Is it not Thy great achievement, oh Abirami?

(65)

வல்லபம் ஒன்றறி யேன்சிறி யேனின் மலரடிச்செம்
பல்லவ மல்லது பற்றொன் றிலேன்பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப் பாய்வினை யேன்தொடுத்த
சொல்லவ மாயினும் நின்திரு நாமங்கள் தோத்திரமே!

I am a soul, mean and talentless!
I ' ve no refuge but Thy sacred feet like tender leaves!
These poems composed by this sinful soul
Though meaningless and wasteful
Are after all in praise of Thy sacred names!
Pray forgive me and accept them!

(66)

தோத்திரம் செய்து தொழுதுமின் போலும் நின் தோற்றமொரு
மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மை குலம்
கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கள் தொறும்
பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே!

Those who worship not, adore not and contemplate not
At least for a while Thy effulgent body
Like the lightning flash
Will be cursed to be beggars
Who, with begging bowls in their hands
Will visit every house for alms!
Their generosity, greatness of clan, gothra
Learning and noble qualities
Will abate day by day!

(67)

பாரும் புனலும் கனலும்வெங் காலும் படர் விசும்பும்
ஊரும் முருகு சுவையொளி ஊறுஒலி ஒன்றுபடச்

சேரும் தலைவி சிவ்காம சுந்தரி சீறடிக்கே
சாரும் தவமுடை யார்படையாத தனமில்லையே!

Sivagamasundari, The supernal Mother by Her presence.
Causes the five Elements namely the Earth,
Water, Fire, whirling Wind and the expansive Sky
To remain associated for ever
With smell taste, light sense of touch and sound!
No wealth in this world is unattainable
To Her servants, who are blessed to
Seek refuge in Her pretty feetd!

(68)

தனந்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவம்தரும் நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன வெல்லாம் தருமன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே!

The graceful eyes of Mother Abirami
With Her flower - laden tresses like the nimbus
Will bless the devotees true with all riches, Learning and a heart that remains dauntless for ever;
They will also bless them with divine appearance
Sincere friendship with men who are free
From malignment and all that is good!

(69)

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன் கடம் பாடவியில்
பண்களிக்கும் குரல் வீணையும் கையும் பயோதரமும்
மண்களிக் கும்பச்சை வண்ணமு மாகி மதங்கர்குலப்
பெண்களில் தோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே!

The ragas take delight in enjoying the sweetness
Of Abirami's voice, which is sweet like the veena, melody;
She, with Her sacred hands and breasts
And Her green hue which delights the world
Incarnated Herself as one among the lasses of Mathanga's clan!
I have , in Madurai city , the grove of kadambu Trees
Feasted mine eyes with Her matchless beauty
And chose Her as my object of worship!

(70)

திருமூலர் நெறி

பேரறிஞர் சுப. அண்ணாமலை

(1) நுழை வாயில்

சாதிகளும் சமயங்களும் மலிந்துள்ள நமது நாட்டில், இவற்றைத் தாண்டிச் சிந்திக்க வல்லவர்களும் இருந்திருக்கின்றார்கள். அளவாற் சிறிய தமிழகமே மூன்று பிரிவுகளாய், சேர சோழ பாண்டி மண்டலங்களாய் இருந்தது எத்தனையோ காலம். மிகப் பழைய சங்க காலத்திலேயே இப்பிரிவுகள் இருந்தன. அக்காலத்திலேயே ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று பாடினார் கணியன் பூங்குன்றனார். உலகம் அளாவிய மக்களினம் முழுவதும் ஒரு குலத்தில் பிறந்த உறவினரே என்பது இப் பொன்மொழியின் பொருள்

விரிந்தகன்ற நெஞ்சத்தில் உருவாகி ஒளி வீசும் இந்த மனிதப் பற்றை, ஆன்மீகத்தில் முதல் முதலில் வெளிப்படுத்திய சான்றோர் ஒருவர் உண்டு. அவரே திருமூலர். அவர் இயற்றிய நூல் 'திருமந்திரம்'. இச்சொல் தெய்வத் தன்மையுடைய மந்திரம் எனப் பொருள்படும். இத்தகைய மந்திரத்தைப் பற்றிய நூல் ஆதலால், இப் பெயர் பெற்றது.

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்பது திருமூலரின் மணிமொழி. இது கணியன் பூங்குன்றனாரின் மொழிக்கு இணையான புகழ்

உடையது. ஆன்மீகத்தில், அம் மொழியில் இல்லாத புதுப்பொருள், இந்த வாசகத்தில் இருக்கின்றது.

'உலகில் எத்தனை தெய்வங்கள் இருந்தாலும், அவை எல்லாம் ஒரே பரம்பொருளின் வேறு வேறு தோற்றங்களே, என்பதுதான் அந்தப் புதுப்பொருள். திருமூலர் காலத்தில் புதியபொருள் அது. ஆயினும், இந்தக் காலத்தில் கடத் தெளிவாகப் புரிந்து கொள்ளப்படவில்லை என்பது தான் விந்தை.

''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்னும் மொழியில், தெய்வங்களின் ஒருமைப்பாட்டை கொண்டே எண்ணற்ற மக்கட்குலத்தின் ஒருமைப்பாட்டையும் சகோதர உறவையும், பிற உயிரினங்கள் கட இந்த உடல்பிறப்பு உரிமை உடையவை என்பதையும் நிலைநாட்டுகின்றார் திருமூலர்.

'பரம் பொருள் ஒருவனே'. அவன் படைத்ததே இந்த உலகம். படைத் ததோடு விட்டுவிடாமல், ஒவ்வொரு சீவனிலும் (உடலும் உயிரும் இணைந் தது சீவன்) அவன் இருக்கின்றான். அவ்வாறு இருக்க மக்களுள் வேறுபாடு ஏன்? நடத்தப்படும் முறையில் மக்களுக்கும், மற்ற உயிரினங்களுக்கும் வேறுபாடு ஏன்?என்று வினவுவது போலப் பாடல் எழுதுகின்றார் திருமூலர். ''ஒன்றே குலமும்'' என்று தமது கொள்கையைக் கூறி, அதற்குக் காரணம் காட்டுவார் போல் ''ஒருவனே தேவனும்'' என்று அடுத்துக் கூறுகின்றார். இந்தக் காரண-கராரிய வாதத்தில் உட்பட்ட கருத்தை, மற்றொரு பாடலில் எடுத்துக்காட்டோடு சொல்கின்றார்.

''மண் ஒன்றுதான் பல நற்கலம் ஆயிடும்'' என்று, எடுத்துக் காட்டினை முன் வைக்கின்றார். அடுத்து ''உள் நின்ற யோனிகள் எல்லாம் ஒருவனே'' என்று, செய்தியை எடுத்துவைக்கின்றார். இதனை, ''யோனிகள் எல்லாம் உள் நின்ற (வன்) ஒருவனே'' என்று மாற்றிக்கொள்ள வேண்டும். யோனி, பிறப்பு. பிறக்கும் உயிர்வகை.

இப் பாடலை ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்னும் மொழி யோடு இணைத்துச் சிந்தித்தால், அம் மொழியில் உள்ள காரணகாரியம் தெளிவாகப் புரியும்.

திருமூலரின் காலத்தில் சைவ நெறி, பரம்பொருள் தத்துவம் உடைய பெருநெறியாக உருவாகிவிட்டது. அதற்கு, அவரது திருமந்திரமே காலத்தால் முதற் சான்று பகர்கின்றது. சைவநெறிக்குத் 'திருநெறி' என்று பெயர் சூட்டியவரும் திருமூலரே.

சைவத்தைப் போல் வைணமும் தனி நெறியாக உருவாகி விட்டமையை மணிமேகலைக் காப்பியம் குறிப்பாகக் காட்டுகின்றது. இந்த இரண்டு நெறி

யாளர்களுக்கு இடையே, அக்காலத்திலேயே, வாதமும் பூசலும் இருந்திருக்க வேண்டும். அதைப் பற்றித் திருமூலர், 'சிவனும் நாராயணனும் பிரமனும் வேறு வேறு என்கின்றார்கள். இவர்களுக்குள் உயர்வு தாழ்வு சொல்கின்றார்கள். தம்முள் மாறுபட்டுச் சண்டை இடுகின்றார்கள். எனனே இவர்களது அறியாமை. இத்தெய்வங்களின் உருவமும் தொழிலும் வேறு வேறு தாம்; ஆயினும், இவர்களுள் இருக்கும் பரம்பொருள் - அதாவது, இவர்களாக நின்று செயல்படும் பரம்பொருள் ஒன்றே அன்றோ, என்ற பொருளில்,

''ஆதிப் பிரானும் அணி மணிவண்ணனும்
ஆதிக் கமலத்தலர் மிசையானும்
சோதிக்கில், மூன்றும் தொடர்ச்சியில் ஒன்று எனார்.
பேதித்து உலகம் பிணங்குகின்றார்களே'

எனப்பாடுகின்றார். (தொடர்ச்சியின், தொடர்ச்சி காரணமாக. தொடர்ச்சி, படைத்தல் காத்தல் அழித்தல் தொழில்கள் தொடர்ந்து நடத்தல். அவற்றைத் தொடர்ந்து நடத்துபவன் பரம்பொருள். அவன் ஒருவனே. ஆகவே, மூவரும் ஒருவரே).

'சிவனோ, நாராயணனோ, அல்லாவோ, பரமபிதாவோ - இந்தப் பெயர் வேறுபாடு, மற்ற வெளி வேறுபாடுகளைப் பாராதீர். எல்லாச் சமயமும் நல்லனவே. பரம்பொருள், அவை எல்லாம் கூறுகின்ற தன்மையிலும் இருக்கின்றான். அவற்றைக் கடந்தும் இருக்கின்றான். ஆகவே, 'உன் சமயம் தாழ்ந்தது; என் சமயம் உயர்ந்தது' என்று சண்டை இடாதீர். இந்தச் சமய வாதம் ஓர் அடர்ந்த, புதர் நிறைந்த காடு. இந்தக் காட்டுக்கு அப்பால், பரம்பொருளைத் தேடுக, என்று அறிவுரை கூறுகிறார் ஒரு பாடலில். அஃது இது

''ஆன சமயம் அது இது நன்று எனும்
மாய மனிதர் மயக்கம் அது ஒழி
கானம் கடந்த கடவுளை நாடுமின்
ஊனம் கடந்த உரு அதுவாமே''

('மயக்கத்தை ஒழிக்கும் கடவுள், கானம் கடந்த கடவுள்' எனத் தனித் தனி கட்டுக. கானம், காடு, ஊனம் - ஊன் உருவம். கடந்த - அவ்வுருவம் போன்ற உருவம் இல்லாத. தெய்வங்கள் மனித உருவம் உடையவை. அவற்றைக் கடந்த. பரம்பொருள் எவ்வுருவமும் இல்லாதது, ஆனால் என்றும் இருப்பது.)

மற்றொரு பாடலில், 'உலகில் நூற்றுக் கணக்கில் சமயங்கள் உள்ளன.

அவை கூறும் நெறிகளை எல்லாம் தாண்டிப் பரம்பொருள் இருக்கிறது. அதைத் தெரிந்து கொண்டால்தான் வீடுபேறு என்று கூறுகின்றார்.

''நூறு சமயம் உளவாம், நுவலுங்கால்
ஆறு சமயம், அவ் ஆறும் படுவன;
கூறு சமயங்கள் கொண்ட நெறி நில்லா
வீறு பரநெறி; இல் ஆம் நெறியன்றே?''

என்பது அப் பாடல் (ஆறும் படுவன- நூறு சமயமும் ஆறு சமயங்களில் அடங்கும். நெறி நில்லா வீறு - நெறிகளில் முடிந்துவிடாத தனித்தன்மை. இது பரம்பொருளுக்கு உண்டு. இல் , வீடு; முத்தி.)

இன்று எங்குப் பார்த்தாலும் சமயத்தில் பேரால், இனங்களில் பேரால் மக்கள் சண்டையிட்டுச் சகோதரர்களின் இரத்தம் ஆறாக ஓட, அதில் களிப் பேறி, வெறிகொண்டு அலையும் உலகிற்குத் திருமூலர் கூறும் அறிவுரை இது.

அவரது நெறியை, அவர்க்குப் பின்னே வந்த பொதுநெறிச் சான்றோர் களின் அறிவைப் பின்பற்றாததால், இன்றைய உலகம், ஆற்றின் நடுவே நின்று கொண்டு, நீர்வேட்கையால் துன்புறுவோனைப் போல், ஆயிரமா யிரம் அறிவியல் முன்னேற்றத்திற்கு நடுவே, காட்டுமிராண்டியாகிக் கொண்டு செல்லும் அவலநிலை ஏற்பட்டிருக்கிறது. இனியாவது, அன்புக்கும் பண்புக்கும் மதிப்புக் கொடுத்து, மானிட மதிப்பை உணர்ந்து திருந்துமா?

பரம்பொருளைத் தேடும் நெறியையே திருமூலர் திருமந்திரம் முழுவ திலும் கூறுகின்றார். ''தேட வல்லார்க்கு அருள் தேவர் பிரான்'' என்று அவனைக் கூறும் அவர், தமது திருமந்திர நூலில் வகுத்துக் கூறும் நெறியால், இதனைக் கற்போரை எல்லாம் 'தேடவல்லார்' (Knowledgeable inquisitors) ஆக்குகின்றார். அவர் கூறும் நெறி உலகியலுக்கு அப்பாற்பட் டது அன்று; வேறானதும் அன்று. அஃது ஒரு பழம் என்றால், அந்தப் பழ மாகக் கனியவிருக்கும் காய் உலகியல்தான். திருமூலர் உலகியலை - மக்கள் வாழ்க்கைப் பண்பை இணைத்தே ஆன்மீக நெறியை வகுக்கின்றார்.

அவரது சொந்த ஆன்மீக வாழ்க்கை சாதாரணமான சூழ்நிலையில் ஒரு புது மலர்ச்சி பெற்றது. சாத்தனூர் என்னும் இடத்தில், அவ்வூர்க்கு வெளியே, பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்த ஒரு கோவலன் (பசுப்புரவலன்) மூலன் என்னும் பெயர் உடையவன் திடுமென இறந்தான். அவனைச் சூழ்ந்து நின்ற பசுக்களின் துயர முகம் கண்ட ஒரு யோகியார் அன்பு மிகுந்து, தமது யோக வலிமையால், இறந்த மூலனுடைய உடம்பிற்

புகுந்தார். மூலனே யானார். தமது உடம்பை ஒரு மரப் பொந்தில் மறைத்தார்.

பசுக்கள் எல்லாம் மகிழ்ச்சிப் பெருக்கால், தம்மை மோந்தும், உரசியும், நாவால் தடவியும் காட்டிய அன்பால் நெகிழ்ந்தார். அவை காட்டிய அன்பில், இறைவனின் அருளை உணர்ந்தார். பசுக்களை ஊரில் சேர்த்த பிறகு, மூலனின்மனைவிக்கும் ஊரார்க்கும் தாம் யார் என்ற உண்மையைக் கூறினார்.

பிறகு மரப்பொந்தில் தமது உடம்பைத் தேடினார். அதைக் காண வில்லை. இறைவனது அருளை உணர்வதற்காக, அவனே அளித்த வாய்ப்பே நடந்துவிட்ட நிகழ்ச்சி என்றும், இனிமேலும் மூலனின் உடம்பிலேயே இருந்து தாம் அருள் - வழியில் பரம்பொருளைத்தேட வேண்டும் என்றும் உணர்ந்தார். இதனைப் பின்வரும் அவர் பாடற் பகுதிகளால் அறியலாம்.

1. ''புகல் இடத்து என் மெய்யைப்போத விட்டானை''

2. ''நந்தி அருளாலே மூலனைநாடிப்பின்
நந்தி அருளால் மெய்ஞ்ஞானத்து நண்ணினேன்''

3. ''வேதத்தில் ஒத்த உடலையும்உள்நின்ற உற்பத்தி
அத்தன் எனக்கு இங்குஅருளால் அளித்ததே''

பின்பு, அண்மையில் உள்ள திருவாவடுதுறையில் யோகம்
இருந்து, அன்பையே அருளாக, சிவமாக வளர்த்துக் கொண்டார்.

அருளாலும், சிவத்தாலும் தாம் பெற்ற இன்பத்தை, ''நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்று உலகிற்கு வழங்கினார். அதுவே 'திருமந்திரம்'.

அவர் வாழ்க்கை அனுபவமே திருமந்திரம் ஆகியது. பரம்பொருளை
அவர் எந்நெறியில் தேடினார்?

ஒரு பெயர் தாங்கி, ஓர் உருவத்தில் மட்டுமோ அல்லது காற்று, சுவை, ஆற்றல் முதலியவை போல அருவத்தில் மட்டுமோ உள்ளதன்று பரம் பொருள் என்ற உண்மை.

''இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமான னாய் எறியும் காற்றுமாகி
அருநிலைய திங்களாய், ஞாயிறு ஆகி
ஆகாசமாய் அட்ட மூர்த்தி ஆகி''

என அப்பரடிகள் கூறவது போல, எங்கும் பரவி, 'வியாபகமாய்', இருப் பது அது. நீருள்ளே இருக்கிறான் என்று, அதை அறிவியல் முறையில்

கூறிட்டுப் பார்த்தால் இருபங்கு நீரக வாய்வும், ஒரு பங்கு உயிரக வாய்வும் தாம் இருக்கும். பரம்பொருள் எங்கே?

நீரில் சுவையாக இருக்கிறான் என்று பெரியோர் கூறுவதும் உபசாரமே. ஏன் என்றால், சுவையும் மாயையின் 36 தத்துவங்களுள் ஒன்று தான். நீர், நிலம், காற்று முதலியவற்றில் அணுக் கூட்டம் உண்டு. அவற்றைச் சுழலச் செய்பவன் பரம்பொருள் என்று கூறலாம். இது, அவனை நேர்முகமாக உணர்ந்து கூறுவதாகாது.

பரம்பொருளை நேர்முகமாக உணர்தல் எவ்வாறு?

அவன் எங்கும் வியாபகமாக உள்ளான் என்றால், நமது சீவனிலும் - அதாவது உடம்பிலும், உள்ளத்தின் உணர்விலும் இருக்கின்றான் தானே?

''உள்ளத்து ஒருவனை உள் உறு சோதியை

உள்ளம் விட்டு, ஓரடி நீங்கா ஒருவனை''

என்கிறார் திருமூலர். பரம்பொருள் யாரோ அல்லன். நம் உள்ளத்து உணர்வு நமக்குச் சொந்தமல்லவோ? அவை நாமே யல்லவோ? அது போலப் பரம்பொருள் நமக்கு இனிய உறவு' ஒரு வகையில், நாமே தான் - இந்தப் பொருள் உடையது முதல் தொடர்.

பின் ஏன் அவன் நமக்குப் புலப்படவில்லை? இதற்கு விடை கூறுகிறது, வருகின்ற தொடர். அவன் நம் உணர்வினுள் மறைந்திருக்கின்றானாம். சும்மா விருக்கின்றானா? இல்லையாம். அறிவு வடிவமாக-நமது அறிவுக்கு அறிவூட்டும் அறிவு ஆற்றலாக இருக்கின்றானாம். (சோதி - அறிவு) அவன் நமக்குப் புலப்பட்டால், அந்தப் புலப்பாடு ஒரு பெரு விளக்காக - சோதி யாகத் தெரியும். அதற்குப் பிறகு என்ன என்று கூறுகிறது அடுத்த தொடர். அவ்வாறு அவன் புலப்பட்டுவிட்டால், அவனை ஒரு கணங்கூடப் பிரிதல் என்பது இல்லையாம். ஒரு காரணம் பற்றிப் பிரிந்தால், அதைவிடப் பெரிய துன்பம் இல்லை என்பது குறிப்பு. மணிவாசக அடிகள், திருப்பெருந்துறை ஆண்டவனைப் பிரிந்து,

''உடையான் அடி நாயேனைத்

தினையின் பாகமும் பிறிவது

திருக்குறிப்பு அன்று, மற்று அதனாலே,

முனைவன் பாத நன்மலர் பிரிந்து

இருந்து, நான் முட்டிலேன் தலைக்றேன்''

எனக் கூறவது காண்க.

நமது உள்ளத்தில் மட்டுமன்றி,உடம்பிலும் இறைவன் இருத்தலை வலி

யுறுத்திக் கூறுபவர் திருமூலரே. அவர் யோகி. யோகத்தில், உணர்வாகிய ஆன்மீகத்தை வளர்க்கும் ஆற்றலே, உடம்பின் உள்ளே மறைந்திருக்கும் ஆற்றல் தான். அதற்குள்ளும் மறைந்திருக்கிறானாம் ஆண்டவன்.

''உடம்பினை முன்னம் அழுக்கு என்றிருந்தேன்

உடம்பினுக்குள்ளே உறு பொருள் கண்டேன்''

என்று புரட்சிக் குரலை எழுப்பும் திருமூலர் இறைவனை 'உறு பொருள்' என்கின்றார் முன்பு அவனை உள்ளத்தின் ஆழத்திற் பார்த்தபோது, 'உறு சோதி' என்றவர் அவர். சோதி என்பது விளக்கம், அறிவு. இஃது இறைவனது சக்தி. பொருள் என்பது உண்மை. இஃது இறைவனே. இதனை விளக்குவது போல் புறப்படுகிறது அடுத்த அடி;

''உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று''

இத்தகைய கோயிலைப் பாதுகாக்க, வளர்க்க வேண்டாவா? இவ் உறுதியைச் சொல்கிறது இறுதி அடி;

''உடம்பினை, யான் இருந்து, ஓம்புகின்றேனே''.

'நானும் என்னவனைப் பிரியாமல் இருக்க வேண்டும். என் உடம்பையும் ஓம்ப வேண்டும்', - இது திருமூலரின் விருப்பம். உடம்பின் ஆற்றலைக் கொண்டு உயிராற்றலை (Life - force) வளர்த்து, அதனைக் கொண்டு உணர்வை வளப்படுத்தி, அதை, 'உள்ளுதலில்', (தியானம்) நிறுத்தி, பல நாள் பயின்று, முடிவாக, உள்ளப்படும் பொருளோடு 'ஒன்றுதல்' யோகம்.

பதஞ்சலி முனிவரால் 'யோக சூத்திரம்' என்னும் நூலில் வகுக்கப்பெற்ற 'எட்டு - உறுப்பியோகத்தை' (அஷ்டாங்க யோகம்) திருமூலர் 'அங்கி யோகமாக' -அந்த எட்டையுமே அங்கமாக உடைய ஒரு பெரிய யோகமாக - சிவயோகமாக வளர்த்தார். அங்கி, தீ; மூலக்கனல்; உயிராற்றல் எனவும் பொருள்படும்.

சிவயோகம் உணர்வை அன்பு, நெறியில் செலுத்தி, அதற்குக் கருவியாக உயிரின் ஆற்றலை - அதில் மறைந்திருக்கும் குண்டலிசத்தி என்ற சத்தியை - வழிபட்டுப் பயன்படுத்தி, பின்பு குண்டலி சத்தியே அருட்சத்தியாக மாறி நிற்க, அதனால் அருள் - அனுபவமும், பிறகு சிவ - அனுபவமும் பெறுதலாகும். இது பரம்பொருளை நேரிற் காண்பதன்றோ?

இனித் திருமூலர் நெறியை அறநெறி, ஒன்றும் நெறி, சிவநெறி, தெளியும் நெறி என்ற நாற்பெரும் பிரிவுகளில் அமைந்த பன்னிரு கட்டுரை வாயிலாகத் தெரிந்துகொள்ள முற்படுவோம்.

தொடரும்...

விட்டிசையும் யாப்பும்

பேரறிஞர் செ.வை.சண்முகம்

(முன் இதழ்த் தொடர்ச்சி)

இந்த நோக்கில் பார்க்கும்போது 'சிறுசோற்றானும்' என்ற அடியில் கூறிய கருத்தும். பெருஞ்சோற்றானும் என்ற அடியில் கூறிய கருத்தும் ஒன்றே. அடி முரண் ஒரு அசையோடு நின்று தொடர்கட்டில் வேறு முரண் எதுவும் அமைக்கப்படவில்லை. எனவே தான், இங்கு இந்த அடி இரண்டுமே தனி அடியாகவே அமைக்கப்பட்டுள்ளது. எனவே கவிஞன் எங்கும் யாப்பு நோக்கில் மட்டும் அடியை வரையறுக்காமல், சொல்கிற கருத்தோட்டத் துக்கும் ஏற்பவே அடியை வரையறுக்கிறான் என்பது புலனாகிறது. வேறு விதமாகச் சொன்னால், முரண் அதிகமாகும் போதே அடி எண்ணிக்கை அதி கமாகும்; அடியின் சீர் எண்ணிக்கை, குறைவாகவும் அல்லது கூடுதலாகவும் அமையும்.

'நரந்த நாறும்... தைவருமன்னே' என்பது ஒரு எளிய வாக்கியமாக இருந்தாலும் அங்குள்ள தொடர்க் கட்டுக்குள் முரணும் கவிதையில் முரண் தொடையும் அமைந்துள்ளது என்பது கவனிக்கத்தகுந்தது. உண்மையில் நரந்தம் /புலவு; தன்/என்; கை /தலை என்று முரண் மூன்று வகையில்

பெரிதுபடுத்தப்பட்டுள்ளது. எனவே முரண் அதிகம் இருப்பதே ஒரு எளிய வாக்கியம், இரண்டு அடியாக அமைக்கக் காரணம் என்று புலனாகிறது. இன்னொரு நோக்கில் 'நரந்தநாறும், தன் கையால்' என்பதை அடியாக அமைத்து அடிவிட்டிசை மூலம் வாசகரை எதிர்பார்க்க வைத்து முரண்தொடையை முதல் சீரில் மட்டும் அல்லாமல் மூன்றாம் சீரிலும் அமைத்ததன் மூலம் எதிர்பார்ப்பு வீண்போகாமல் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டது என்று கூறலாம்.

இந்தப்பாடலில் 'கழிந்தது' என்று பொருள்படும் 'மன்னே' என்ற இடைச்சொல்லை எல்லா வாக்கியத்துக்குப்பிறகும் பயன்படுத்தியிருப்பது இயைபுத் தொடை (அடியின் கடைசி சீர் அல்லது சொல் திருப்புரையாக வருவது) மூலம் கவிஞனின் சோகத்தை அதுவும் கடந்த காலத்துக்கு இரங்கும் வருத்தத்தைப் புலப்படுத்துகிறது.

இங்கு இரண்டு செய்திகள் சிறப்பாகச் சுட்டிக்காட்டத்தகுந்தவை;

!,மாறுபட்ட சீர் எண்ணிக்கை உடைய அடிக்களுக்கே விளக்கம்

கொடுக்கப்பட்டது!! அந்த அடிகள் எல்லாம் தொடர்க்கட்டு

நோக்கில் ஒரு உறுப்பி(constitute)கருதத்குந்தவை. உதாரணமாக 'பெரிய கட் பெறினே 'என்பது நியதி வினைத்தொடர்'. நரந்தநாறும் 'தன் கையால்' என்பது மூன்றாம் வேற்றுமைத் தொடர்.

ஐங்குறு நூற்றுப் பாடல் :-

உரையாசிரியர்கள் காட்டிய ஐங்குறு நூற்று அடியான (உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை) என்பது ஒரூஉ எதுகை அடியாக அமைந்தாலும் தொடர்க் கட்டு நோக்கில் முழுவாக்கியமும், இன்னொரு வாக்கியத்தின் ஒரு சொல்லுமாக அமைந்திருப்பது, வழக்கத்துக்கு மாறாக அடிவிட்டிசை அமைந்து எதிர் பார்ப்பை உண்டாக்குகிறது.

உள்ளார் கொல்லோ தோழி முள்ளுடை
அலங்குடை ஈந்தின் சிலம்பிபொதி செங்காய்
துகில் பொதி பவளம் ஏய்க்கும்
அகில் படு கண்ணியங் காடிறந்தோரே

என்பதே முழுப்பாடல். இது தலைவன் பொருள் ஈட்டுவதற்காக வெளியூர் சென்றிருக்கிறானே என்ற தலைவியின் கவலையை விளக்குகிறது. தான் தனியே இருந்து வாடுவதை நினைத்துப் பார்க்க மாட்டாரா என்பது தலைவியின் ஏக்கம். தலைவனும் உல்லாசப் பயணம் செல்லவில்லை. முள்ளை உடைய ஈச்ச மரங்களும், கள்ளியும் நிறைந்த காட்டு வழியாகத்தான் பொருள் சம்பாதிக்கச் சென்றிருக்கிறான். எனவே 'முள்ளுடை' என்பதை

முதல்டியிலே விட்டிசை அமைத்து, தலைவி தனக்காக மட்டும் அல்லாமல் தலைவனுக்காக - தலைவன் சென்ற வழியின் தன்மைக்காக - வழியின் கொடுமைக்காக வருந்துகிறாள் என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்தி யுள்ளார்

4. புதிய உதாரணங்கள்:-

இன்னும் சில உதாரணங்கள் மூலம் அடி விட்டிசையின் சிறப்பைப் பார்ப்போம். திருக்குறளிலிருந்து மூன்று பாடல்களும், குறுந்தொகையிலி ருந்து இரண்டு பாடல்களும் இங்கு விளக்கப் படுகின்றன.

4.1. குறள்

ஒரு வாக்கியமே இரண்டு அடியாக அமைந்த குறள்களில் இரண்டு அடியும் குறைவாக்கியமாக அமைந்தாலும், முதலடி ஒரு உறுப்பு என்று கருதுகிற முறையில் அமைந்துள்ள பாடல்களும் உண்டு. இரண்டு வாக்கி யமாக அமைந்த குறள்களில் இரண்டும் தனித்தனி வாக்கியமாக அமைந்த பாடல்களும் உண்டு; முதல் அடி முழு வாக்கியமும், இன்னொரு வாக்கி யத்தின் ஒரு சொல்லாகவும், அடுத்த அடி குறைவாக்கியமாகவும் அமைந்த பாடல்களும் இருக்கின்றன.

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல-

என்ற குறளில் (4) ஒரு வாக்கியமே இரண்டு அடியாக அமைந்து முதலடி ஒரு உறுப்பு என்று கருதும்படி அமைந்துள்ளது.

அறத்திற்கே அன்பு சார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

என்ற குறளில் (76) இரண்டு அடியுமே முழு வாக்கியங்கள். தனித்தனி வாக்கியங்கள் தனித்தனி அடியாக அமைந்துள்ளன.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

என்ற குறளில் இரண்டு வாக்கியம் இருந்தாலும் முதல் அடி, ஒரு முழு வாக்கியமும். ஒரு குறை வாக்கியமும் சேர்ந்தது. இரண்டாவது அடி குறை வாக்கியம்.

4.1.1. 'வேண்டுதல்'

மேலே காட்டிய முதல் குறள், கடவுளின் பெருமையையும் கடவுள் வணக்கத்தின் சிறப்பையும் விளக்கினாலும் கடவுளின் பெருமை (இறை வனின்) அடிக்கு - பாதத்துக்கு அடையாகவே வந்துள்ளது. எனவே பாட்டு

கடவுள் வணக்கத்தின் பெருமையை நன்கு வலியுறுத்துவதாகக் கொள்ள வேண்டும். அதற்கேற்பவே கடவுளை வணங்குபவர்க்கு முக்கியம் கொடுக்கும் வகையில் 'சேர்ந்தார்க்கு' என்பதற்குப் பிறகே அடிவிட்டிசை அமைக்கப் பட்டிருக்கிறது. அதனால் அவர்களுக்கு எப்பொழுதும் துன்பங்கள் இல்லை என்பது வலியுறுத்தப்படுகிறது. இறைவனுடைய பண்பு அடியவர்களையும் ஒட்டிக்கொண்டு, அவனைச் சேர்ந்தவர்களுக்கு விருப்பு, வெறுப்பு மறைவதால் தான் துன்பங்கள் ஏற்படுவதில்லை என்பதும் உணரத்தகுந்தது.

4.1.2.அறத்திற்கே

இந்தக் குறளில் முதலடி முழு வாக்கியமாக இருந்தாலும் 'அறியார்' என்ற நான்காவது சீரே வாக்கியத்தின் எழுவாய். அது எதிர் மறை வினை யாலணையும் பெயர். எனவே இங்கு விட்டிசை அமைக்கும் போது அறிந் தவர் யாராக இருக்க வேண்டும் என்ற கேள்வி நம் மனதில் எழுகிறது. அதற்கேற்ப 'மறம்' என்ற ஒரே சொல் மட்டும் முரணாக அமைந்து தொடர்ந்து அதே பாணியில் முடிந்து விட்டது.ஆனாலும் நேரடியாக மறத்திற்கும் அன்பே சார்பு என்று கூறாமல் 'அஃதே துணை' என்று கூறி யதும் கவனிக்கத்தகுந்தது. அன்பு மறத்திற்குத்துணை என்பதைச் சொல்லக் கூசியே பதிலீட்டுப்பெயரால் (pronown) அதைக் குறிப்பிட்டுள்ளார். இதை உலக வழக்கத்திலும் கவனிக்கலாம். ஒன்றைத் திருப்பிச் சொல்ல விரும் பாதவர்கள் முன்னால் சொன்னதுதான் - அதுதான் என்று குறிப்பிடுவார்கள். எனவே 'மறத்திற்கும் அஃதே துணை' என்று கூறுகிறவர்கள் அறிந்தவர் என்று குறிப்பால் கூறவைக்கப்பட்டதோடு அதை முழு மனதோடு சொல்ல வில்லை என்பதையும் பதிலீட்டுப் பெயர் புலப்படுத்துகிறது.

4.1.3.செயற்கரிய

இந்தப் பாடல் கடை இணை முரண் (மூன்றாவது சீரும் நான்காவது சீரும்) அமைந்தது. பொருளாலும் முரண் உடையதுதான். பெரியர் என்று யார் என்று விளக்கி விட்டு, சிறியர் என்ற சொல்லிற்குப்பின் அடி விட்டிசை ஏற்படுத்தும் போது எதிர் பார்ப்பை உண்டாக்கினாலும் அடுத்துக் கூறப் போகிற கருத்து ஓரளவு 'செயற்கரிய செய்யாதவர்' என்ற எதிர் மறைதான் என்பது ஊகிக்கக் கூடியதே. ஆனாலும் கவிதையில் உடன் பாட்டுக் கருத் துக்கும், (செயற்கரிய செய்வார்) எதிர் மறைக் கருத்துக்கும் (செயற்கரிய செய்கலாதார்) ஒரு ஒற்றுமையும் (செயற்கரிய என்ற சொல் திருப்புரையாக உள்ளது) இரண்டு வேற்றுமையும்: - கல் என்ற துணைவினை எதிர் மறையில் மட்டும் சேர்ந்துள்ளது. உடன் பாட்டுச் சொல்லான செய்வார் ஒரு சீராகவும், எதிர்மறைச் சொல்லான செய்கலாதார் இரண்டு சீராகவும் அமைந் தது. இந்தவேறுபாடு இருக்கும் படி அமைத்தது வாசகர்களைச் சிந்திக்க

வைக்கிறது. இவ்வகைகளுடைய பொருள் சிறப்பு என்ன? உடன் பாட்டு வாக்கியத்தில் துணை வினை சேர்க்காதது குறிப்புப் பொருள் உடையது. துணை வினை சேர்த்தால் 'செய்ய முடிந்தவர்' என்று பொருள் படும். உலகத்தில் திறமை உடையவர் அந்தத்திறமையைப் பயன்படுத்தி அரிய காரியங்களைச் செய்யாமல் இருப்பதைக் காணலாம். எனவே காரியத்தைச் செய்து முடிப்பவர் - செய்பவர்தான் பெரியார்; செய்யத்திறமை உடையவர் எல்லாம் பெரியார் அல்ல. மேலும் பிறரைநோக்கத் திறமை இல்லா விட்டாலும் கடின உழைப்பால் செயற்கரிய செய்பவரும் பெரியார் என்பதற்குத்தான். 'செய்வார்' என்ற எளிய வினையை மட்டும் அதாவது துணை வினை இல்லாமல் பயன் படுத்தியுள்ளார். திறமை இல்லாததாலோ கடின உழைப்பு இல்லாததாலோ அரிய காரியம் செய்ய முடியாதவர் 'சிறியர்' என்பதை உணர்த்தவே எதிர் மறையில் மட்டும் துணை வினையைச் சேர்த்துள்ளார்.

'செய்வார்' என்பதில் திணை-பால் கருதி ஒரு சீரின் பகுதியாக உள்ளது. இங்கு அதுவே எழுவாயும், கருத்தாவும் ஆகும். மாற்றிலக்கண மொழியியலாளர் கருத்துப்படி வினை முற்றில் வரும் திணை - பால் விகுதி, புற நிலையில் வருவதே தவிர அகநிலையில் அமைவது இல்லை. எனவே பெரியர் என்ற வினை முற்றில் வரும் திணை, பால் விகுதிக்குச் சிறப்பு இல்லை. அதாவது வாக்கியத்தின் பொருள் உணர்வுக்கு அது பங்கு அளிப்பதில்லை. கருத்தாவாக இருக்கிற திணை-பால் விகுதியே முக்கியமானது. அதுவே அரிய செயலின் கருத்தா; இருந்தாலும் அது ஒரு சீரின் பகுதியாக அமைக்கப்பட்டுள்ளது. அது செய்பவரின் பணிவைப் புலப்படுத்துகிறது. ஆனால் அடுத்த வாக்கியத்தில் எல்லாம் தலை கீழ். பயனிலை முதன்மைப் படுத்தப்பட்டு,எழுவாய் கடைசிக்குத் தள்ளப் பட்டிருக்கிறது. மேலும் இரண்டாவது வாக்கியத்தின் எழுவாய்க்குரிய திணை-பால் விகுதி தனிச் சீராக அமைந்திருப்பது அவருக்கு அடக்கம் இல்லை என்பதைப் புலப்படுத்தி விடுகிறது. எனவே செய்ய முடியாமல் இருப்பதோடு அடக்கம் இல்லாதவர் என்பதையும் இரண்டாவது அடியின் சீரமைப்புப் புலப்படுத்துகிறது. ஆகையால் சிறியர் என்பதற்குப்பின் அடி விட்டிசை அமைத்தது ஆசிரியர் கருத்துணர்வும், பொருள் அழுத்தமும் உடையது என்பது புலனாகி விடுகிறது.

4.2.குறுந்தொகை

குறுந்தொகைப் பாடல் ஒன்றில் முதல் அடியில் இருக்கும் அடி விட்டிசை அடுத்த அடியில் மட்டும் குறிப்புப் பொருளைக் கொடுக்கிறது என்பதையும், இன்னொரு பாட்டில் உள்ள முதலடியின் விட்டிசை அடுத்து வரும் எல்லா அடிகளிலும் குறிப்புப் பொருள் கொள்ள இடம் இருக்கிறது என்பதையும் அறியலாம்

4,2.1.மாவென

மாவென மடலும் ஊர்ப, பூவென
குவிமுகிழ் எருக்கங்கண்ணியும் சூடுப
மறுகின் ஆர்க்கவும் படுப
பிறிதின் ஆகுப காமங்காழ்க் கொளினே.

என்ற குறுந்தொகைப் பாடலில் (17) கடைசி இரண்டு அடியும் தனித்தனி வாக்கியங்கள் . இரண்டாவது அடி குறை வாக்கியம். முதலடிதான் ஒரு முழு வாக்கியமும் இன்னொரு வாக்கியத்தின் ஒரு சொல்லும் சேர்ந்தது. எனவே முதலடியில் உள்ள விட்டிசை அதிகக் குறிப்புப் பொருள் உடையது. மேலே கூறியபடி அதன் பொருள் அழுத்தம் அடுத்த அடியோடு முடிவடைந்து விடுகிறது.

குதிரை என்று நினைத்துக் கொண்டு பனங்கீற்றில் ஏறுவார்கள் 'என்பது முதலடியிலுள்ள வாக்கியத்தின் பொருள். இது வாசகரிடம் எள்ளல் உணர்வை உண்டாக்குகிறது.

எனவே அதே அடியில் 'பூவென' என்ற சீரோடு அடி விட்டிசை அமையும் போது, வாசகரிடம் மாற்று முறையில் இரண்டு வித எதிர்பார்ப்பு ஏற்படுத்துகிறது. 1.பூவாவது நறுமணம் உடையதை அணிவானா? அல்லது மணம்இல்லாததைச் சூடுவானா? என்பது அடுத்த அடியில் நேரடியாக மாலை (கண்ணி) யைக் குறிப்பிடாமல் எப்படிப்பட்ட பூ (குவி முகிழ்) என்று கூறி விட்டே, என்ன பூ (எருக்கம் பூ) என்று குறிப்பிட்டு, பூவின் தன்மையை நாம் ஊகிக்கவிடப் பட்டுள்ளது. உலக அறிவாலேயே எருக்கம் பூ வாசனை இல்லாததால் யாருமே அணியாதது என்று அறிந்து கொள்கிறோம். எனவே 'பூவென' என்பதற்குப் பிறகு வரும் விட்டிசை இழிவு சிறப்பு என்ற குறிப்பைப் புலப்படுத்துகிறது. அது எள்ளல் என்ற உணர்வை மிகுவிக்கிறது. அதே சமயத்தில் செய்பவர் எப்பேர்ப்பட்டவர்; எதற்காகக் கிறுக்குத்தனமாக இவைகளைச் செய்கிறார் என்று விளக்காததால் வாசகரின் எதிர்பார்ப்பைக் கூட்டுகிறது.

தொடரும்...

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மிகக்குறைந்த செலவில் அறிமுகப்படுத்தும்

மீனாட்சி ஹெல்த் கேர் திட்டம்

மிகக்குறைந்த செலவில் அனைத்து உடல் பரிசோதனையும் செய்துகொள்ள அரிய வாய்ப்பு

திட்டத்தின் சிறப்பு பரிசோதனை

1. தலைமுதல் கால்வரை பரிசோதனை
2. விரிவான முறையில் கண் பரிசோதனை
3. பல் பரிசோதனை
4. இரத்தப் பரிசோதனை
5. சிறுநீர் பரிசோதனை
6. ஸ்கேன்
7. நெஞ்சு எக்ஸ்ரே
8. ஈ.சி.ஜி.

★ ***இரத்தவகை***
★ ***சர்க்கரை அளவு***
★ ***சீரம் கிரியேட்டினைன்***
★ ***கொலஸ்ட்ரால் அளவு***

கூடுதல் பலன்கள்

★ ***இலவசமாக இரத்த அழுத்தம் பார்த்தல்***
★ ***இலவசமாக இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவு***
★ ***இலவசமாக இரண்டுமுறை தலைசிறந்த நிபுணர்களால் ஆலோசனை (ஒரு வருடத்திற்கு)***

இத்தனையும் ரூ.400/- செலவிலேயே

பெண்களுக்கு: பெண் மருத்துவரின் சிறப்பு ஆலோசனை மற்றும் புற்றுநோய் சம்பந்தமான ஆலோசனைகள் வேண்டுமெனில் கூடுதல் ரூ.50/- செலுத்தவேண்டும்.

தொடர்புக்கு

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம்.

Only Private Hospital in South Tamilnadu Approved by State Govt. for Govt. Employees (G.O.Ms. No.490/19/6/95)

லேக் ஏரியா, மேலூர் ரோடு, மதுரை-625 107.

Ph: Call: 42481 (5 Lines) 535977 (3 Lines)

உயர்ந்த மருத்துவம், குறைந்த செலவில்

USHA GRAPHICS,
34, Subramaniya Pillai Street, S.S.Colony, Madurai-10. PH: 602896.